விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 27 புதன்கிழமை (10.06.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 173

SATS-TECH ENGINEERS
T20
ICC WORLD TWENTY20 ENGLAND 09
Now available in dishtv & sundirect
New packages & Renewal
Call .-222 5908 / 222 8812

# தமிழீழ விடுதலைப் புலிகளை விட தமிழர்களின் பிரச்சினை பெரியது



## இந்தியப் பிரதமர் உரை

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையானது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை விடப் பெரியது. தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதில் இலங்கை துணிவுடன் செயற்படும் என நான் நம்புகிறேன் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும்

### வெளிவிவகார அமைச்சர் நாடாளுமன்றில் உரை

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்கள் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என வெளியுறவுத்துறை அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இது குறித்து நாடாளுமன்றத்தில் அவர் மேலும் கூறியதாவது, இலங்கையில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நடந்த சண்டையை அடுத்து மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் பல்வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர் (14ஆம் பக்கம் பார்க்க)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்கள் நியமனப் பாடசாலையில் இணைக்கப்படுவர்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(திருகோணமலை)

வன்னி மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றி தற்போது வெளி மாவட்டங்களில் தற்காலிக இணைப்பிலுள்ள பாடசாலை ஆசிரியர்களை மூன்றாம் தவணை தொடக்கம் நியமனம் வழங்கப்பட்ட பாடசாலைகளிற்கு இணைக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 ஆம் திகதிக்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாநகர முதல்வர் சுதந்திரக்கட்சியில் இணைவு

### ரி.எம்.வி.பியிலிருந்து இராஜினாமா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் சிவகீதா பிரபாகரன் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மத்திய குழு தலைவரான கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பில் கூடியது.

அக்குழுக் கூட்டத்தில் கலந்த கொண்ட மாநகர சபை முதல்வர் சிவகீதா பிரபாகரன் தனது அரசியல் நிலைப் பாட்டை விளக்கியும், தான் சிறிலங்கா சுதந்திர கட்சியில் இணைய எடுத்த முடிபு தொடர்பாக வும் விளக்கிய பின்பு ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துவிட்டு அங்கிருந்து வெளியேறினார்.

தனது சுய (14ஆம் பக்கம் பார்க்க)

## வவு. இராணுவத் தலைமையகத்தில் நேற்று பாரிய வெடிச்சத்தம்!

### தீ விபத்தே காரணம் என்கிறார் பிரிகேடியர்

(வவுனியா)

வவுனியாவிலுள்ள வன்னி இராணுவத் தலைமையகத்தில் அமைந்துள்ள ஆயுதக் கிடங்கு நேற்று மாலை பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன.

இவ் வெடிச்சம்பவம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடிய உதய நாணயக்கார கூறியதாவது;

அங்கே வெடிகுண்டு வெடிப்பு எதுவும் ஏற்படவில்லை அங் (14ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர் குழுவினால் தயாரிக்கப் பட்ட க.பொ.த. உயர்தரப் பரீட்சை வணிகக்கல்வி -பகுதி 11

## மேர்வின் சில்வா பதவி துறப்பு! எம்.பி. ஆகிறார் கோத்தபாய?





(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ நாடாளுமன்றத்திற்குள் நுழை வதற்கு ஏதுவாகத் தனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்வதாக தொழில் துறை அமைச்சர் மேர்வின் சில்வா அறிவித்துள்ளார்.

இராஜினாமாச் (14ஆம் பக்கம் பார்க்க)

## வவு.நலன்புரி நிலையங்களுக்கு யசூசி அகாசி நேற்று விஜயம்

### இன்று ஜனாதிபதியுடன் சந்திப்பு

(வவுனியா)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியா நலன்புரி முகாம்களுக்கு சென்று அகதி மக்களை நேரில் பார்வையிட்டுள்ளார்.

அத்துடன் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள அகதி மக்களுக்கு அரசாங்கத்தினால் செய்துகொடுக்கப்பட்டுள்ள வசதிகள் தொடர்பிலும் அகரசி ஆராய்ந்ததாக தெரிவிக்கப் படுகின்றது.

யசூஷி அகாசி (14ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் நிறைவேற்றம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பது தொடர்பான பிரேரணை 95 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 102 வாக்குகளும் எதிராக 7 வாக்குகளும் செலுத்தப்பட்டன நாடாளுமன்ற (14ஆம் பக்கம் பார்க்க)

## 'தமிழ் மக்களுக்கு சம உரிமை' ஜெயலலிதா வலியுறுத்தல்



(சென்னை)

சிங்கள மக்களுக்கு சமமாக தமிழர்களுக்கும் உரிமைகளை பெற்றுக்கொடுக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இது தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மழை விட்டாலும் தூவானம் விடவில்லை என்ற பழ மொழிக்கு ஏற்ப இலங்கையில் போர் நின்று விட்டாலும் அப்பாவி தமிழர்களின் அவல நிலை தொடர்ந்து (02ஆம் பக்கம் பார்க்க)

# உதவி அமைப்புக்களை அனுமதிக்குமாறு கோர ஐ.நா. சபைக்கு உரிமை இல்லையா?

## ஐ.நா. பேச்சாளரிடம் 'இன்னர் சிற்றி' கேள்வி

இலங்கையில் இடம் பெயர்ந்த அப்பாவி தமிழ் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு நிதியுதவி அளித்து பெருமளவு செலவு செய்து வரும் ஐக்கிய நாடுகள் சபைக்கு அங்கு மனித நேய உதவிப்பணிகளை மேற்கொள்வதற்கான தன்னார்வ அமைப்புகளை அனுமதிக்குமாறு இலங்கை அரசை கோர உரிமை இல்லையா? என்றும் இது பற்றி ஐ.நாவின் பாதுகாப்புச் சபை விவாதிக்குமா? என்றும் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

ஐ.நாவின் பேச்சாளர் பார்ஹான் ஹக்கிடம் இன்னர் சிற்றி பிரஸ் செய்தி ஆய்வாளர் மத்யூ றசல் லீ இந்த கேள்விகளை எழுப்பியுள்ளார்.

இடம்பெயர்ந்த முகாம்களில் வாழும் தமிழர்களுக்கு எந்தச் சட்டப் பாதுகாப்பும் இல்லை என்றும் இலங்கை சட்டத்தில் அவர்களுக்கு நீதி கிடைக்க வழியில்லை என்றும் இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா அண்மையில் கூறியிருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

முகாம்களில் உள்ள அப்பாவி தமிழ் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு வழி செய்யுமாறும் அவர்களை ஆய்வு செய்து பதிவு செய்யும் நடவடிக்கையை விரைவுபடுத்துமாறும் இலங்கை அரசை ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தி வருவதாக ஐ.நாவின் பேச்சாளர் பார்ஹான் ஹக் பதிலளித்துள்ளார்.

முகாம்களில் ஆய்வு என்பது, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களா தமிழர்களின் உரிமைகளை ஆதரிப்பவர்களா என்று நடத்தப்படும் அரசியல் ஆய்வாகும். இந்த முகாம்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை பெருமளவு நிதி உதவி அளிப்பதால் அங்கு என்ன சட்டப் ப்பாதுகாப்புக்கள் இருக்கின்றன என்று கேட்க வேண்டியது நியாயமானது என்று மத்யூ றசல் லீ மீண்டும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை நீதிமன்ற அமைப்பின் அதிகார வரம்பு என்ன என்பது எனக்குத் தெரியாது. அது அவர்களிக் தேசியச் சிக்கல் எனக் கருதுகிறேன் என்று பார்ஹான் ஹக் அதற்கு பதிலளித்தார். ஆனால் அப்பாவி தமிழ் மக்களை முகாம்களில் அடைத்து வைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் நிதியுதவி அளிக்கும் நிலையில் அவர்களுக்கு சட்டப் பாதுகாப்புக்கள் இல்லை என்பதை தேசிய சிக்கலாக மட்டுமே கருத முடியாது.

கெயர், குழந்தைகளைக் காப்போம், என். ஆர். சி. போன்ற தன்னார்வ அமைப்புக்களின் அனைத்துலக உதவிப் பணியாளர்களுக்கு இலங்கையில் தங்குமிட விசா மறுக்கப்பட்டிருப்பது குறித்து கேள்வி எழுப்பப் பட்டது. மனிதநேய உதவி அமைப்புக்களுக்கு அனுமதியளிக்குமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் பதிலளித்தார்.

சூடானில் டார்பர் பகுதிக்கு செல்லத் தன்னார்வ உதவி அமைப்புக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட போது ஐ.நா. செயலகம் உரத்த குரல் எழுப்பியது. ஆனால் இப்போது? ஹெய்ட்டி, புரூண்டி ,மியான்மர் சிக்கல்கள் தான் ஐக்கிய நாடுகள் சபையில் தொடர்ந்து விவாதப் பொருளாக இடம்பெறுகிறதே தவிர இலங்கைத் தமிழர் சிக்கல் அல்ல என்றார். (ச-5)

# விண்ணப்பம் கோரல்கள்

### பிரதிப் பணிப்பாளர் பதவி

சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சில் இலங்கை விஞ்ஞான சேவையின் 11 ஆம் வகுப்பின் Iம் தர பிரதிப் பணிப்பாளர் (சுற்றாடல் மாசு முகாமைத்துவம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயனவியல் அல்லது பௌதிகவியல் சிறப்பு பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

இப் பதவிக்கு விண்ணப்பிப்போர் 10.07. 2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக செயலாளர், பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

### பொறியியலாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு

இலங்கை பொறியியலாளர் சேவையின் சிவில் பொறிமுறை மற்றும் மின்னியல் பொறியியலாளர் பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை 10.07.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம் ,பெலவத்த, பத்திரமுல்ல எனும் அஞ்சல் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இவ் விண்ணப்பம் கோரல் தொடர்பாக 12.06.2009 வெளியாகவுள்ள வர்த்தமானி பிரதியை வலம்புரி காரியாலயத்தில் இன்று முதல் பார்வையிடலாம். (ச)

# அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

வடக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு அடையாள அட்டை இல்லாத வாக்காளர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை வழங்க தேர்தல் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். மாநகரசபை மற்றும் வவுனியா நகரசபை ஆகிய இரு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெற உள்ளதோடு யாழ். மாநகர சபைத் தேர்தலில் வாக்களிக்க ஒரு இலட்சத்து 417 பேரும் வவுனியா நகர சபை தேர்தலில் வாக்களிக்க 24 ஆயிரம் பேரும் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுள் பலருக்கு அடையாள அட்டை இல்லை என அறிவிக்கப்படுவதால் தற்காலிக அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் சுமணசிறி தெரிவித்தார். இதன்படி தமது பிரதேச கிராம உத்தியோகத்தரினூடாக தற்காலிக அடையாள அட்டை பெற விண்ணப்பிக்குமாறு தேர்தல் செயலகம் கோரியுள்ளது.

சகல தேர்தல்களிலும் அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளதோடு தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், புகையிரத பருவச்சீட்டு, ஓய்வூதிய அடையாள அட்டை , முதியோர் அடையாள அட்டை, மதகுருமார்களுக்கான அடையாள அட்டை என்பன உள்ளவர்களுக்கு மாத்திரமே வாக்களிக்க அனுமதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிப்பார். (ச-5)


யாழ் மண்ணில் முதன் முறையாக புதியதோர் அறிமுகம்

தற்போது உலகளாவிய ரீதியில் 191 நாடுகளில் இயங்கிவரும் சைனா நாட்டின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான Tianshi நிறுவனத்தின் தலைசிறந்த வல்லுநர்களால் உருவாக்கப்பட்ட, இயற்கை மூலிகைகளிலான MANKA CAPSULES

Manka வில்லைகளானது உலகில் பல்வேறுபட்ட நாடுகளில் பல்லாண்டு காலமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தற்பொழுது டியான்ஷி Manka வில்லைகள் இலங்கையிலும் கிடைக்கின்றன. குறைப்பாடுகள் காரணமாக விருப்பமில்லாத வாழ்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் நோயாளிகளுக்கு இது மிகவும் உகந்தது. Manka வில்லைகள் நவீன உயிரியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இயற்கை மூலிகை மற்றும் உள்ளடக்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. Manka வில்லைகள் உங்கள் வாழ்கையை மீண்டும் மகிழ்ச்சி நிறைந்ததாக மாற்றும். நம்பிக்கையை தளரவிட வேண்டாம். Manka வில்லைகளைப் பாவியுங்கள். வேறு மருந்துகளைப் போலன்றி Manka வில்லைகள் முழுமையான பரிகாரமாகும். அத்துடன் இதன் பலன் நிலையானது. நீங்கள் முழுமையான திருப்தி அடைவீர்கள் என்பது உறுதியே.

சேர்வைகள் :
Palm-Fruit, polyeptide, Salmon- milt polypetide, Albusmin polypepetide Chinese wolfberry extract and minerals.

பாவனை முறை-
காலை 2 மாத்திரை. மாலை 2 மாத்திரை வீதம் சாப்பாட்டின் பின் வெந்நீருடன் எடுக்கவும் அல்லது நித்திரை செய்வதற்கு அரை மணி நேரத்திற்கு முன் 4 மாத்திரைகள் எடுக்கவும்.




ZINC SUPPLIMENT

(ZINC Lactate. முட்டை புரோட்டீன் மற்றும் குளுகோஸ் போன்றவற்றிலிருந்து தயாரிக்கப்பட்டது.)
கண் பார்வை நன்றாக இருக்க உதவுகிறது.

கல்லீரலின் மேலதிகமான வளர்ச்சியை தடுக்கிறது.
இரத்த சோகையை போக்குகிறது.
சுவையையும் மணத்தையும் (வாசனை) நன்கு உணரச் செய்கிறது.
நாவில் சுவை உணரும் நாளங்களை பாதுகாக்கிறது.
பசியை தூண்டுகிறது.
மதுவினால் ஏற்படும் கோளாறுகளை போக்கிறது.
உடலில் சர்க்கரை மாற்றத்தை சீராக்குகிறது.
தளர்ச்சியுற்ற நரம்பு மண்டலத்தையும் நோய் எதிர்ப்பு சக்தியையும் நலமடையச் செய்கிறது.



யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்
P.AMBIKAIKUMAR,
Tianshi Independent Distributor.
No, 27/9, Wyman Road, Nallur, Jaffna.
T.P:- 0776670108.

கிடைக்கும் இடங்கள்
Sun city Pharmacy & Grocerey
No.518, HOSPITAL ROAD
JAFFNA.
T.p:- 0779152359

விநியோகஸ்தர்கள் தேவை


# இலங்கையில் இடம்பெற்ற மோதலை உன்னிப்பாக அவதானித்து வந்தோம்

## சீன இராணுவ அதிகாரி தகவல்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அரசாங்கம் எதிராக மேற்கொண்ட படை நடவடிக்கையை நாம் உன்னிப்பாக அவதானித்தவாறே இருந்தோம் என்று சீன இராணுவத்தின் பிரதம அதிகாரி லெப். ஜெனரல் மாசியா ஒதியன் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகமவை சிங்கப்பூரில் சந்தித்தபோது அவர் இந்தக் கருத்தை தெரிவித்ததுடன் இலங்கைக்கு ஒரு மில்லியன் டொலர் உதவித் தொகையும் வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கைப் படையினர் எட்டிய வெற்றி திருப்தி தருகின்றது. நாம் போரை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்திருந்தோம். நெருக்கடியான கால கட்டத்தில் உதவிகளையும் வழங்கியிருந்தோம்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் உள்ள இரு தரப்பு உறவுகள் முக்கியமானது. திபெத் உட்பட ஒரு சீனா என்ற கொள்கையை இலங்கை வலுவாக பின்பற்றி நிற்பது போற்றத்தக்கது. இலங்கைக்கு ஒரு மில்லியன் டொலர்களை உதவியாக சீனா வழங்குகின்றது. அது மேலதிக உதவிகளையும் வழங்கும் என்றார் அவர். (ச-5)



வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு உதவுவதற்காக கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான இந்து இளைஞர் மன்றத்தினால் கிராம மக்களிடமிருந்து திரட்டப்பட்ட அறுபத்தையாயிரம் ரூபாய் நிதி இந்து அமைப்புக்களின் ஒன்றியத் தலை வரிடம் கையளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# 'தமிழ் மக்களுக்கு சம...

கொண்டேதான் இருக்கிறது.

இலங்கை முகாம்களில் வாழும் அப்பாவித் தமிழர்கள் படும் வேதனைகளை வார்த்தைகளால் விவரிக்க முடியாது என்று அந்த நாட்டின் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா கவலை தெரிவித்துள்ளார்.

அந்த நாட்டுச் சட்டப்படி தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என் றும் அவர் கூறியதாக பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளது.

இந்த சூழ்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் விவகாரத் துறை ஆணையாளர் இலங்கையின் தமிழர் பகுதிகளில் மனித உரிமைகள் மீறப்பட்டது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

இதற்கு பிரான்ஸ்,ஜப்பான்,தென் கொரியா, பிரித்தானியா போன்ற நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. ஆனால் இந்தியா இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இலங்கை அரசின் மனித உரிமை மீறல் பிரச்சினை ஐக்கிய நாடு கள் சபையில் ஏற்கப்படவில்லை. இது மிகுந்த மன வருத்தத்தை அளிக்கிறது.

தமிழினத் தலைவர் என்று தன்னைத் தானே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் முதலமைச்சர் கருணாநிதிக்கு தமிழர்களை பற்றிய கவலை அறவே கிடையாது. தனது மக்களுக் காக வளமான அமைச்சுக்களைப் போராடி பெறும் அளவுக்கு தமிழ் மக்களுக்காக போரா டும் மனம் கருணாநிதிக்கு கிடையாது.

இதனால் தன் மக்களின் வளமான வாழ்க் கைக்கு பங்கம் வந்து விடுமோ என்ற ஐயம் தான் இதற்கு காரணமாகும்.

இலங்கையில் அதிகாரப் பகிர்வு குறித்து மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரமும் கருணாநிதியும் சந்தித்துப் பேசியதாக பத்திரி கைகளில் செய்தி வெளியாகியுள்ளது.

ஆனால் இளையான்குடி சட்டப் பேரவைத் தொகுதி இடைத் தேர்தலில் தனது மகனை வேட்பாளராக நிறுத்துவது தொடர்பாகத்தான் கருணாநிதியுடன் சிதம்பரம் பேசியதாக தக வலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே தமிழர்களுக்கு வளமான வாழ்க் கை கருணாநிதியால் அமையப் போவதில்லை என்பது உறுதி.

முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர் களுக்கு மறுவாழ்வு அமைத்துத் தரவும் சிங் கள மக்களுக்கு சமமாக தமிழ் மக்கள் வாழ வும் தமிழர்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவும் இந்திய அரசு உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர். (ச-5)

# இன்று ஒரு தகவல்

## மருந்தில் கவனம்

எனக்குத் தெரிந்த ஒருவர் இருந்தார். அவர் பொட்டுக் கடலை சாப்பிடுவது போல் மருந்து மாத்திரைகளை உட்கொள்ளுவார். ஏழெட்டு விதமான மாத்திரைகளை உள்ளங்கையில் எடுத்துக் கொள்ளுவார். அதை அப்படியே வாயில் போட்டு தண்ணீரை ஊற்றி விழுங்கி விடுவார்.

சரி... இவற்றையெல்லாம் டாக்டரைக் கேட்டு வாங்கினாரா என்றால் அதுவும் இல்லை. மருந்து மாத்திரையின் பெயரெல்லாம் மனப்பாடமாக இவருக்குத் தெரியும்.

கடைக்குப் போய் கடலை மிட்டாய் வாங்கிக் கொண்டு வருவது போல் இவர் மருந்து வாங்கிக் கொண்டு வருவார்.

இது நல்ல பழக்கம் என்றா நினைக்கிறீர்கள்? நாம் உட்கொள்ளும் மருந்துகளைப் பற்றி இரண்டு விடயங்களை முக்கியமாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

முதல் விடயம் – பக்க விளைவுகள். அதாவது மருந்தினால் ஏற்படக்கூடிய வேண்டாத விளைவுகள்.

பொதுவாக பலருக்கு ஒவ்வொரு மருந்தும் ஏதாவது வேண்டாத விளைவை சிறிதளவாவது உண்டாக்கியே தீரும். வீரியம் குறைந்த மருந்துகளைக் கூட தவறான முறையிலோ, நீண்ட காலத்துக்கோ, அளவுக்கு மீறி அதிகமாக சாப்பிட்டாலோ வேண்டாத விளைவுகள் உண்டாகிவிடும். அதுமட்டுமல்ல. ஒரு மருந்து வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறு விதமான வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தும்.

இது நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒரு முக்கியமான விடயம். இரண்டாவது – டாக்டர்கள் சொல்லும் ஆலோசனையை சரியாக கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

பலர் டாக்டரிடம் போவார்கள். மருந்தெல்லாம் வாங்குவார்கள். ஆனால் எந்த மருந்தை எந்த அளவில் எப்பொழுது உட்கொள்ள வேண்டும் என்று டாக்டர் சொல்வதை சரியாக காதில் வாங்கிக் கொள்வதில்லை. அல்லது புரிந்து கொள்வதில்லை.

சிலர் இரண்டு மாத்திரை உட்கொள்ள வேண்டியதற்குப் பதிலாக நான்கு மாத்திரை உட்கொண்டால் வியாதி சீக்கிரம் குணமாகி விடும் என்று நினைப்பார்கள். இன்னும் சிலர் உடம்பு கொஞ்சம் சரியானதும் மருந்து உட்கொள்வதை நிறுத்தி விடுவார்கள். இதெல்லாம் மிகவும் ஆபத்தான விடயங்கள். அதனால் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

நாம் சர்வ சாதாரணமாக வாங்கி உட்கொள்ளும் சில மாத்திரைகளைப் பற்றி கொஞ்சம் தெரிந்து வைத்திருப்பது நல்லது.

அஸ்பிறின் சம்பந்தப்பட்ட மாத்திரைகள் உண்டு. சலிசிலிக் அமிலத்தின் ஒரு வேதி விளை பொருள் இது. காய்ச்சல், வீக்கம், தலைவலி, மூட்டுவலி, உடல்வலி, இவற்றையெல்லாம் தணிக்கும் குணம் இதற்குண்டு. இரத்தத்தில் கட்டி உண்டாவதை இது தடுக்கிறது. இதனால் இதயத் தாக்குதல் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் குறைகிறது.

இருந்தாலும் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவர் கண்காணிப்பு இல்லாமல் அஸ்பிறின் மருந்துகளை கொடுக்கக் கூடாது. பெரியவர்களுக்குக் கூட இது வேண்டாத விளைவுகளை ஏற்படுத்த முடியும். அஸ்பிறின் உட்கொண்ட பின் வேறு மருந்து உட்கொள்ள வேண்டியிருந்தால் அஸ்பிறின் உட்கொண்டிருப்பதை டாக்டரிடம் சொல்லி விடுங்கள்.

பரசிட்டமோலும் நாம் சுலபமாக வாங்கி உட்கொள்ளும் ஒரு மருந்து. சின்னசின்ன வலிகள், வேதனைகளுக்கெல்லாம் நிவாரணம் அளிக்கும். ஆனால் அஸ்பிறினுக்கு இருக்கும். வீக்கம் தணிக்கும் குணம் இதற்கு இல்லை.

இதை அதிகம் உட்கொண்டால் கடுமையான ஈரல் சேதம் ஏற்பட்டு உயிருக்கே ஆபத்தாக முடியும். அஸ்பிறின் – பரசிட்டமோல் இவையிரண்டும் கலந்திருக்கும் மருந்துகளை அதிகமாகவும் நீண்ட காலத்துக்கும் உட்கொண்டால் சிறுநீரக நோய்கள் வரும்.

அடுத்தது – Anti biotics – நுண்ணுயிர்க்கொல்லிகள். இது கொஞ்சம் தாமதமாக செயல்புரியும் ஒன்று. கொஞ்சம் குணம் தெரிந்தவுடன் பாதியிலே நிறுத்திவிடக்கூடாது. சில வகைகளை வெறும் வயிற்றிலும் சிலவற்றை சாப்பிட்ட பின்னரும் தான் உள்ளெடுக்க வேண்டும்.

மருந்து சாப்பிட்டுக் கொண்டே மதுவையும் சாப்பிடக்கூடாது. கருவுற்ற பெண்கள் டாக்டரைக் கேட்காமல் எந்த மருந்தையும் சாப்பிடக்கூடாது.

ஒருத்தர் எல்லா வியாதிகளுக்கும் தானே வைத்தியம் பண்ணிக் கொள்வார். அவருக்கு ஒரே நேரத்தில் ஏகப்பட்ட கோளாறு வந்து விட்டது. உடனே கடைக்குப் போனார். காய்கறி வாங்குவது போல் ஒரு பை நிறைய மருந்து – மாத்திரை வாங்கி வந்தார்.

"என்னங்க... இவ்வளவு மாத்திரை இருக்கிறதே இதெல்லாம் சாப்பிடுவது எப்படி? ஆகாரத்துக்கு முன்னரா... பின்னரா?" என்று கேட்டார் ஒருவர்.

"அதைப்பற்றிக் கவலையில்லை. ஏனென்றால் எனக்கு ஆகாரமே இதுதான்" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தினூடாக நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவிகளின் விபரம்

இந்து அமைப்புக்களின் ஒன்றியம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து யாழ். நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கான நிவாரண உதவிகளை இந்து ஆலயங்கள், பொது ஸ்தாபனங்கள் மற்றும் பொதுமக்களின் ஆதரவுடன் செய்து வருகின்றது.

இதன் பிரகாரம் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதியில் இருந்து மே மாதம் 31 ஆம் திகதி வரை 25 இலட்சத்து 48 ஆயிரத்து 497 ரூபாவை சேகரித்து வழங்கியுள்ளது.

இவ்வுதவிகளை வழங்கியோர் விபரம் வருமாறு,

கொய்யாத்தோட்டம் ஞான செல்வ விநாயகர் தேவஸ்தானம் - 14000, செல்வி. புஸ்பா செல்வநாயகம் நல்லூர் - 25000, சுன்னாகம் ஐயனார் கோவில் பரிபாலன சபை - 38410, நீராவியடி ஸ்ரீ ஜெய வீரசக்தி விநாயகர் ஆலயம் - 50 000, நியத்திரி அமைப்பு நல்லூர் - 50000, கோண்டாவில் மேற்கு பொது அமைப்புக்கள் - 40000, டாக்டர் ரி. கணேசரத்தினம் லண்டன் - 80000, நெல்லண்டை பத்திரகாளி அம்மன் - பருத்தித்துறை - 50000, கற்பக விநாயகர் ஆலயம் உரும்பிராய் - 10000, எஸ். நவரத்தினம் கொக்குவில் - 5000, வெயிலுகந்த பிள்ளையார் தேவஸ்தானம் நாயன்மார்கட்டு - 20000, ஊர்காவற்றுறை பிரதேச சபை - 276 00, மாதினி ராஜலிங்கம் குடும்பம் கோண்டாவில் 5000, கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் - 56000, நீர்பாசன பொறியியலாளரும் ஊழியர்களும் - 36000, சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம் - 50000,

உரு. கற்பக விநாயகர் மகளிர் சிக்கன கடன் உதவி கூட்டுறவுச் சங்கம் - 20000. வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற செயலாளரும் 57 பணியாளரும் - 29856, தர்மராசா வசந்தி - ஜேர்மனி - 25000, யோகநாதன் சாந்தி குடும்பம் பிரான்ஸ் - 20000, ந. கோணேஸ்வரன் நல்லூர் - 14000, டாக்டர் சிவரூபி செல்வராஜ் அச்சுவேலி - 100 00, ஞானதிலகம் லண்டன் - 20000, திருமதி ஜெயந்தி சற்குணபாலன் லண்டன் - 25000, திருமதி மீரா ஸ்ரீக்குமார் லண்டன் - 25000, திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்கம் - 50000, அல்வாய் கோவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் - 50000, சண்டிலிப்பாய் பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும் - 41400, மானி/ செயலாளரும் வட. தே.மே. பிரதேச சபை 92 உத்தியோகத்தர்கள் - 46100, தெல்லிப்பளை பிரதேச செயலாளரும் உத்தியோகத்தர்களும் - 47600, சங்கானை பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும் - 45 450, திருமதி ஜெகதீஸ்வரி வரதன் - நல்லூர் -5000, ந. விவேகானந்தன் யாழ்ப்பாணம் - 4000, எம். தர்மதாஸன் கனடா- 10000.

பொன்னாலை சித்தி விநாயகர் ஆலயம் -5000, சத்தியசீலன் காந்தி குடும்பம்- 50000, கே. யோகாநந்தா லண்டன்- 9000, சி. சயந்தன் - 1500, ம. கிருபாகரன் - 1000, ம. விஜயதாஸ் - 1000, க. யோகேந்திரா - 1000, ஞா. செல்வகரன் - 500, ஐ. மயூரன் - 500, அ. புவனகுமார் - 500, ந. ராகுலன் - 500, த. குமாரதாஸ் - 1500, பா. கமல்காந் - 500.

ம. காளிதாஸ் - 500, க. விஜயானந் - 500, இ. இளங்கீரன் - 500, ஜெ. மாறன் - 500, த. ஜெகன் - 30 00, சி. பிரணவன் - 3000, நிமால் ஸ்ரீ - 6000, சி. கஜேந்திரன் - 1000, அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் - 500 00, துறையன்கோட்டம் கரவெட்டி கா. புவனேந்திரன் - 7000.

திருமதி. ஆறுமுகம் நாகபூசணி திருநெல்வேலி - 5000, நாச்சியார் செல் வநாயகம் சுழிபுரம் - 4000, ஆணைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயம் - 60 550, வண்ணார் பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம் 283840, நல்லூர் ஓய்வூதியர் சங்கம் - 50 00, பொன்னாலை சித்தி விநாயகர் ஆலயம் - 5000, அல்லையம்பதி துன்னாலை ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம் - 15800.

திருமதி. சிவலிங்கம் குடும்பம் கலட்டி - 3000, திருமதி கலைவாணி ராமநாதன் தாவடி - 5000, அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கம் -10600, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூ.ச.ச.சம்மேளனம் - 150000, ஈச்சமோட்டை கலட்டிபுரம் ஸ்ரீ ஞான வைரவ ஆலய பரிபாலனசபை - 10000, வி. கஜேந்திரன் கலட்டி - 3000, இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை - 20000, உரும்பிராய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் - 5000.

புறொப். என். சுந்தரலிங்கமும், யு.எஸ்.ஏ. திருமதி சிவபூரணம் சுந்தரலிங்கம் - 15000, யாழ்ப்பாண மாநகர சபை பணியாளர்கள் - 119200, யாழ்ப்பாண மாநகரசபை சைவ சமய விவகாரக் குழு - 30800, நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை சமூகம் - 10000, சீனியர் ஒழுங்கை இராசநாயகம் சாந்தநாயகி நினைவாக - 4000, நயினர் தீவு நயினை ஸ்ரீ நாக பூசணி அம்மன் தேவஸ்தானம் - 100000.

மாதகல் பாணாவெட்டி புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் - 100000, கொக்குவில் நந்தாவில் அம்மன் தேவஸ்தானம் - 1000 00, மல்லாகம் வலி. வடக்கு பிரதேச சபை நலன்புரிச் சங்கம் - 51500, நா. லக்ஸ்மணதாஸன் நெடுந்தீவு - 1000, நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோவில் தலைவர் - 10000.

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோவில் 5 ஆம் திருவிழா உபயகாரர் - 35000, இந்து சமய பேரவை BOC கணக்கு இலக்கம் 8944876 இன் மூலம் செயற்பாட்டுச் செலவு போக மிகுதி 191291.

(ஓ)

## இராசி பலன்

10.06.2009

(வைகாசி 27, புதன்கிழமை)

திருதியை பின்னிரவு 5.39 மணிவரை

பூராடம் மாலை 6.46 மணிவரை

இராகுகாலம் 11.52-1.22 மணிவரை

சுபநேரம் 4.22-5.52 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | உத்தியோக பங்கம், பிரயாணம், வீண்பயம், எதிர்பாராத செலவு. |
| இடபம் | ஆரோக்கியக்குறைவு, எதிர்பாராத பகை, காரிய தடங்கல், போசன சுகம். |
| மிதுனம் | மனோ தைரியம், காரிய அனுகூலம், களஸ்திர நன்மை, பெருமையடைதல். |
| கடகம் | தடைப்பட்ட காரியம்கைகூடும், சுவாரஸ்யம், தேகநலன், பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | காரிய இடையூறு, அஜீரணக் ரோகம், பூர்வ புண்ணிய கருமம், பணக்குறைவு. |
| கன்னி | உடல் நலக்குறைவு, உறவினர் வெறுப்பு, முயற்சி தாமதம், மனச்சஞ்சலம். |
| துலாம் | இஷ்ட சித்தி, மனோதைரியம், சகோதரர் வழி நன்மை, பிரயாண நன்மை. |
| விருச்சிகம் | போசன சுகக்குறைவு, மனோ சங்கடம், காரிய தாமதம், அதிக செலவு. |
| தனுசு | வெகுமானம், தெய்வசிந்தை, புதிய முயற்சி, போசன சுகம். |
| மகரம் | சோம்பல் நிலை, காரிய அலைச்சல், பிறருக்கு உதவுதல், சுப செலவு. |
| கும்பம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் வருகை, காரிய நன்மை, சயன சுகம். |
| மீனம் | பிறர் உதவி, முயற்சி பலிதம், ஆரோக்கியம், தொழில் மேன்மை. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 170 | 160 | 120 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 170 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 |
| தக்காளி | 220 | 220 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 80 |
| கோவா | 90 | 90 | 140 |
| கரட் | 100 | 100 | 100 |
| பூசணி | 25 | 40 | 30-60 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 | 60-70 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 70 | 75 | 80 |
| வெண்டிக்காய் | 50-70 | 80 | 80 |
| கரணைக் கிழங்கு | 80 | 80 | 80 |
| பயிற்றங்காய் | 80 | 80 | 180 |
| லீக்ஸ் | 100 | 120 | 140 |
| பீற்றூட் | 70 | 90 | -- |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 360 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 10 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25-30 |

## கும்பாபிஷேக தினவிழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கிராவளை ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேக பெருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

விழாவில் காலை 8மணி முதல் அஷ்டோத்திர சத 108 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. தொடர்ந்து இவ் ஆலய கும்பாபிஷேக தினத்தை யொட்டி ஆலய திருத்தல் வரலாற்று நூல் வெளியிடப்படவுள்ளது. (ஓ-4-49)

## பொது அறிவுப் பரீட்சை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் சரசாலை பொது நூலகத்தினரால் மாணவ வாசகர்களது பொது அறிவை மேம்படுத்தும் நோக்கில் மாதந்தோறும் நடத்தப்படும் அறிவை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் இரண்டாம் பரீட்சையில் மட்டுவில் மகாவித்தியாலய மாணவன் ம.றஜிகரன் 1ஆம் இடத்தினை பெற்றுள்ளார்.

இத்திட்டத்தின் மூன்றாவது பரீட்சை நாளை வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு சரசாலை பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

மாணவர்களை உரிய நேரத்திற்குவருகை தருமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ-29)

## புதிய தன்னியக்க பணப் பரிவர்த்தனை சேவை ஆரம்பம்

(சாவகச்சேரி)

இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையின் புதிய தன்னியக்க பணப்பரிவர்த்தனை சேவை (ஏ.ரி.எம்) அங்குரார்ப்பண நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தன்னியக்க பணப்பரிவர்த்தனை சேவையை வட மாகாண உதவிப் பொது முகாமையாளர் ந. சிவரட்ணம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ச-14)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 16 ஆவது வருடாந்த மாநாடு

## இறுதி நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 16 ஆவது வருடாந்த மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் காலை செயலமர்வு கலாநிதி நா. சிவயோகன் தலைமையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். சமூக விஞ்ஞான பிரிவுத் தலைவர் கலாநிதி கே. சுதாகர் (Urban Remote Sensing Case: Jaffna Municipality) எனும் தலைப்பில் கிராமத் தொலையணர்வு பற்றி யாழ். மாநகரசபையை சிறப்புப் பார்வையாகக் கொண்டு உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து கலாநிதி நளினா ஞானவேல்ராஜா "Agriculture, Land degradation, Global warming : Links and Options for Mitigation" எனும் தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

விவசாயம், நிலவளத் தேய்வு, உலகளாவிய வெப்பமயமாதல் என்பனவற்றிற்கிடையேயான தொடர்புகளும் பாதிப்பு நிவர்த்திக்கான தெரிவுகளும் பற்றி ஆய்வுரை வழங்குவார்.

அன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் புதிய நிர்வாகக் குழுவின் தலைவர் பேராசிரியர் க. சிவபாலன் "Food for Health" எனும் தலைப்பில் சுக வாழ்வுக்கான உணவு பற்றி தலைமை உரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து பாடசாலை விஞ்ஞான நிகழ்வின் கீழ் நடத்தப்பட்ட தகவல் தொழில் நுட்ப போட்டிப் பரீட்சைகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் இடம்பெறும்.

யாழ். குடாநாட்டிலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளில் பயிலும் உயர்தர மாணவர்கள் 4ஆயிரத்து733 தோற்றிய முதலாம் கட்டப் பரீட்சையில் இருந்து தெரிவு செய்யப்பட்டு இரண்டாம் கட்டப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய 53 மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் முதன்மை மாணவனுக்கு பதக்கமும் வழங்கப்படவுள்ளது.

சங்க அங்கத்தினரோடு ஆர்வலர்களும், மாணவர்களும் பங்குபற்றி பயன்பெறுமாறு விஞ்ஞான சங்கம் கேட்டுக் கொள்கின்றது. ஓ

## இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரண நிதி உதவிகள்

(யாழ்ப்பாணம்)

போரினால் இடம்பெயர்ந்து யாழ் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கான உதவிகளை வழங்கும் பொருட்டு இந்து அமைப்புக்களின் ஒன்றியம் நிதி மற்றும் பொருட்களைச் சேகரித்து வழங்கி வருகின்றது.

இதன் பிரகாரம் அண்மையில் நிதியுதவி வழங்கியோர் விபரம் வருமாறு,

யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம், வைத்திய கலாநிதி விக்கினேஸ்வரன் ரூபா 5 ஆயிரம், தர்மினி துஷி (லண்டன்) ரூபா 10 ஆயிரம், யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் ஆலயம் ரூபா ஒரு இலட்சம்; ஆ. சு. பஞ்சரத்தினம் ரூபா ஆயிரம்.

இதேவேளை வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் ஆலயம் நல்லை ஆதீன மேம்பாட்டு நிதியத்துக்கும் ரூபா 25 ஆயிரம் வழங்கியுள்ளதாக இந்து அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. ஓ

## மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சங்கத்தானை வைரவ சுவாமி, கந்த சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.40 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

இவ் உற்சவத்தில் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும்,23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பூங்காவனமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4-29)

⌘ ⌘ ⌘ ⌘ ⌘

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவன நாதர் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4-29)

## வருடாந்த உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சங்கத்தானை நரசிம்மவைரவர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்கிழமை ஆரம்பமாகி யூலை மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவன வைபவத்துடன் நிறைவடைய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-29)

## யாழ். செய்திகள்

## விண்ணப்பங் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறிக்கு அடிப்படைத் தகைமைகள் எதுவும் கோரப்படவில்லை.

மேலும் இக்கற்கை நெறியானது ஆரம்பப் பாடநெறி, அடிப்படைப் பாடநெறி, தொழில் சார் ஆங்கிலப் பாடநெறி, என மூன்று பகுதிகளாக நடைபெறவுள்ளதுடன் இக்கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என யாழ். பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## யாழ் மாவட்ட வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஏ/9 வீதியூடாக வாகனத் தொடரணிகளில் பொருட்களை கொண்டு வரும் சகல வர்த்தகர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாண வணிகர் கழக பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஏ/9 வீதியூடாக வாகனத் தொடரணிகளில் பொருட்களை கொண்டுவர இருக்கும் சகல வர்த்தகர்களையும் யாழ்ப்பாணத்திலிருந்து பொருட்களை அனுப்ப இருக்கும் வர்த்தகர்களையும் தவறாது பங்குபற்றுமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஓ-4)

## பால் விற்பனை நிலையம் ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் முதலாவது பால் விற்பனை நிலையம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு அண்மையில் உள்ள கடைத் தொகுதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிலையத்தை ஆரம்பித்து வைப்பதுடன் சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-29)

## தட்டுப்பாடற்ற மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ. சங்கம் தனது பகுதி மக்களுக்கு போதுமான அளவு மா கையிருப்பில் வைத்து இருப்பதாக மக்கள் தட்டுப்பாடின்றி மாவினை பெற்றுக கொள்ளமுடியும் எனவும் சங்கத்தின் தலைவர் க. இராஜரெட்ணம் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## கலந்துரையாடல்




2009 ஆம் ஆண்டுக்கான உள்ளூர் அதிகார சபை தேர்தல் தொடர்பாக யாழ். மாநகர சபைக்குட்பட்ட பிரிவிலுள்ள சகல கிராம அலுவலர்களுடனான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதுபற்றி யாழ். மாவட்ட தெரிவு அத்தாட்சி அலுவலரால் பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-4-30)

## நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் வடக்கு, கிழக்கில் உள்ள பிராந்திய நிலையத்தில் வெற்றிடமாகவுள்ள இணைப்பதிகாரிகள், விசாரணை உத்தியோகத்தர்களுக்கான நேர்முகத் தேர்வு இன்று புதன் கிழமை கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-30)

இடம்பெயர்ந்துள்ள மக்களின் சுகாதார மேம்பாட்டுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட நோயாளர் தங்கும் விடுதி திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உலக சுகாதார ஸ்தாபன தேசிய ஆலோசகர் வைத்திய கலாநிதி ஹிரிஸ் சந்திரயக் கண்டாவல மங்கள விளக்கேற்றுவதையும் நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட அபிவிருத்திக்கும் நிவாரணத்திற்குமான சர்வதேச நிறுவன பதில் தேசியப் பணிப்பாளர் எம்.எச்.எம்.முனாஸ் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் : சாவகச்சேரி செய்தியாளர்)

# வர்த்தகர்களுக்கு வரப்பிரசாதமாகும் கடன் அறவிடும் சட்டத்தின் 25 (1) பிரிவுக்கான உயர் நீதிமன்ற தீர்ப்பு

(8ஆம் திகதிய தொடர்ச்சி)

ஆகவே இன்றுள்ள சட்ட நிலைப்பாடு என்னவெனில் மதிப்பிழந்த காசோலையை வைத்திருப்பவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யாமல் நேரடியாக ஒரு சட்டத்தரணியை அணுகி அவர்மூலம் வழக்கை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யலாம் என்பதேயாகும்.

## மதிப்பிழந்த காசோலைக்கு எப்படி பணத்தைப் பெறலாம்?

### மதிப்பிழந்த காசோலைக்கான வழக்கை எவ்வாறு தாக்கல் செய்யவேண்டும்?

மதிப்பிழந்த காசோலைக்கான பணத்தைப் பெறவேண்டுமானால் பின்வரும் அம்சங்களை உங்களது வழக்கின் பிராதில் காட்ட வேண்டும்.முதலாவதாக காசோலையை உங்களுக்கு வழங்கியவர் என்ன காரணத்திற்காக அக் காசோலையை உங்களுக்கு வழங்கினார். வியாபாரியாக நீங்கள் இருந்தால் உங்களிடம் பொருட்களை வாங்கிக் கொண்டு அதற்காக அந்தக் காசோயை வழங்கினார் எனக் காட்ட வேண்டும். கடன் வாங்கியிருந்தால் அதற்காக அக்காசோலையை வழங்கினார் எனக் காட்ட வேண்டும்.

பின்னர் அந்த காசோலை வங்கியில் பணத்தை பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டது என்றும் வங்கியில் பணம் இல்லாததால் திருப்பி உங்களிடம் வங்கியின் குறிப்புடன் வழங்கப்பட்டது என்பதும் காட்டப்பட வேண்டும்.

வங்கி காசோலைக்கான பணம் இல்லை என்று குறிப்பிட்டு உங்களுக்கு காசோலையை தந்திருந்தால் இது பற்றி நீங்கள் ஒரு கடிதம் எழுதி காசோலையை தந்தவருக்கு அனுப்பி விபரத்தை அறிவிப்பதுடன் பணத்தை தருமாறு கேட்க வேண்டும். அவர் காசைத் தந்தால் வழக்கு எழாது. அவர் பணத்தை தர மறுத்தால் வழக்கு எழும்.

இறுதியாக உங்களுக்கு மேற்படி சட்டத்தின் கீழ் பணத்தைப் பெற காரணம் உண்டு என்பதை விளக்கி நீதிமன்றத்திடம் பணத்தை பெற்றுத் தருமாறு கோர வேண்டும்.

இந்த பிராதில் நீங்கள் சாட்சியாக கூப்பிடவிருக்கும் நபர்களின் பெயரையும் ஆவணங்களின் பெயரையும் குறிப்பிட வேண்டும். காசோலை கொடுத்த இடத்தில் நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். உதாரணமாக கொழும்பில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு காசோலை இங்கு வழங்கப்பட்டால் அந்த நீதிவான் நீதிமன்றத்திலேயே வழங்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

இறுதியாக நீங்கள் வழக்கை தாக்கல் செய்தபின்னர் நீதிமன்றத்தில் அதுபற்றிய தொகுப்புரையை கூற வேண்டும். நீதிவான் அத் தொகுப்புரையை பொறுத்து எதிராளிக்கு அழைப்பாணை அல்லது நோட்டீஸ் அனுப்புவதா? எனத் தீர்மனிப்பார். உங்களது கோரிக்கையை நீதிமன்றம் ஏற்கலாம் என்ற நிலைப்பாட்டை நீதிமன்றத்தில் உணர்த்த வேண்டும்.

உங்களது வழக்கு ஏற்கப்பட்டால் நீதிமன்றம் எதிராளியை நீதிமன்றுக்கு வருமாறு கட்டளை அனுப்பும். அவர் மறுத்தால் அவரை பிடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு பிடியாணையை பிறப்பிக்கும். பிடியாணை பிறப்பிக்கப்பட்டால் இலகுவில் பிணை வழங்கப்பட மாட்டாது. ஆகவே எதிராளி நோட்டீஸ் கிடைத்த உடனேயே நீதி மன்றத்தில் தோன்றுவார்.

எதிராளி வழக்கு விசாரணையன்றி உங்களுடன் ஒரு சமரசத்திற்கு வந்து மாதா மாதம் ஒரு தொகைப் பணத்தை செலுத்த உடன்படலாம். இந்த உடன்பாடு நீதி மன்றத்தில் பதிவு செய்யப்படும். உடன்பாட்டை மீறினால் பின்னர் சந்தர்ப்பத்திற்கும் வழக்கின் முடிவுக்கும் தக நடவடிக்கை எடுக்கலாம். எப்படியிருப்பினும் உங்களது பணம் உங்களுக்கு கிடைக்கும்.

நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றை சட்டத்தரணி மூலம் (Private plaint) அல்லது பொலிஸார் மூலம் தாக்கல் செய்ய வழியிருப்பதால் நீங்கள் உங்களது பணத்தைப் பெற ஒரு சட்டத் தரணி மூலம் அல்லது பொலிஸ் மூலம் வழக்கைத் தாக்கல் செய்து கொள்ளலாம்.

கடன் அறவீட்டுச் சட்டத்தற்கு முன்னை பலர் அங்கராய்த்துக் கொண்ட விடயம் என்ன வெனில் மாவட்ட நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கைத் தாக்கல் செய்து பலனளிக்காது என்றும் காசோலை வழங்கியது பணம் இல்லாத நிலையில் அவரிடம் ஒன்றையும் அறவிட முடியாது என்றும் மேலும் மேலும் செலவாகுமேயொழிய வேறு ஒன்றும் நடைபெறாது என்பதுமாகும்.

ஆனால் கடன் அறவிடும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பால் இன்று மேற்படி அங்கலாய்ப்பு நிலை மாற்றப்பட்டு பணத்தைப் பெறக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதுமாகும்.

**சட்டத்தரணி கே.ஜி.ஜோன்**

மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்ய வேண்டுமானால் காசோலையை மதிப்பிழந்தது என குறிப்பிட்ட வங்கி உள்ள இடத்திலேயே வழக்கைத் தாக்கல் செய்ய வேண்டும். அத்துடன் ஆறு வருட காலத்திற்குள் வழக்கைத் தாக்கல் செய்ய வேண்டும். இந்த இரண்டு அம்சங்களும் மேற்படி சட்டத்தின் கீழ கவனிக்கப்படுவதில்லை. (முற்றும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

76



பெற்று ஓட்டுனரின்றி சுயமாக ஓடுவது போன்றிருந்தது. தப்பிப் பிழைத்து வந்து சேர்ந்ததே இறைவனின் பேரருளுக்கு இன்னுமொரு சாட்சி யாகியது. மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்தவர்களின் றெஸ்ரோரன்ட்றிற்கு போனார்கள். சாப்பாடு, குடிவகைகள் பரிமாறப்பட்டன.

றோய் எல்லாவற்றையும் ஒரு பிடி பிடித்தான். மீண்டும் வரவழைத்து தொடர்ந்து சாப்பிடும் போது அவன் எடுத்த முயற்சி துல்லியமாக தெரிந்தது.

றோய் ஒரு பெரிய கடனீட்டு நிதி நிறுவன மொன்றில் கணக்காளராகப் பணி புரிகிறார்.

ஒபாமா அவனது மனைவி ஏன் இராப் போசனத்தில் கலந்து கொள்ளவில்லை யென்று ஆவலாகக் கேட்டார். றோயின் முகம் மாறியது. அவன் சிரிப்பும் குதூகலமும் நீராவியாகி மறைந்தன.

"நாங்கள் மணமுறிவுக்கு ஆயத்தமாகிறோம்".

"பாவம்"

"அவள் நான் வெகுநேரம் கழித்துத் தான் வீடு திரும்புகிறேனாம். நான் மிதமிஞ்சிக் குடிக்கிறேனாம். அவள் அதைவிட கிழவரைப் போலவே ஆகிவிட்டேன் என்று குற்றங்கள் சாட்டுகிறாள்."

"நீ என்ன நினைக்கிறாய்?"

"உண்மையைச் சொல்லப்போனால் எனக்கு என்னிலையே வெறுப்பு. இதற்கு அந்தக் கிழவன் தான் காரணம்.

அடுத்த மணித்தியாலம் அவன் தான் பட்ட துன்பங்களைக் கூறினான். அவையெல்லாம் ஒபாமா ஏலவே கூறியவைதான்.

அவன் கைவிடப்பட்ட நிலையில் தந்தையிடமிருந்து பிரிந்து போய் சொந்தங்களின்

ஔமா சொன்னது சரிதான். அவன் உரிச்சுக் கழற்றி கிழவரைப் போன்றுதானிருந்தான்.

அமெரிக்காவில் தனக்குக் கிடைத்துள்ள ஆனந்தமான வாழ்வு இன்னும் அவனுக்குத் தெவிட்டவில்லை போலும். அவன் ஓட்டிய ரோயோட்டா (Toyota) கார் அந்த மூட்டைத் தேகத்தைச் சுமக்க போதாது.

வீதி விதிகளை இன்னும் அவன் சரியாகப் படிக்கவில்லை. வேகக்கட்டுப்பாட்டை மீறிய ஓட்டத்தால் இருமுறை எதிர் வந்த கார்களுடன் மோதாமல் தப்பிப் பிழைத்தார்கள். ஒலிநாடாப் பெட்டியிலிருந்து கிளம்பும் இசைப் பிளிறலுக்கு மேலே ஒபாமா "நீ இப்படித்தான் கார் ஓட்டுவது வழக்கமா?" என்று கத்தினார்.

"மேரி என்மனைவி எப்போதும் என்னைத் திட்டுவாள். நான் அசட்டுத்தனமாக கார் ஓட்டுவதற்கு அதுவும் அந்த விபத்துக்குப் பிறகு ..." என்ன விபத்து? ஒபாமா கேட்டார்.

"இன்னும் உயிருடன் தான் இருக்கிறேனே? என்று சிரித்தான். கார் தானாக உயிர்

தயவில் வாழ்ந்தபோது நைரோபி பல்கலைக் கழகத்தில் (University of Nairobi) படிக்க அனுமதி கிடைத்தது. அங்கே கணக்கியல் பாடத்தில் சிறந்த பெறுபேற்றுடன் பட்டம் பெற்று நைரோபியில் உள்ள கணக்காளர் நிறுவனத்தில் சேர்த்தார்.

தொழில் கட்டுப்பாடு, வேலைக்கு எல்லோரும் முந்தி வந்து சேர்தல்,எடுத்த எந்த வேலையையும் அலுப்பின்றி பின்னிரவு வரையும் கூடச் செய்து முடித்து விடுதல் ஆகி ய பண்புகள் தந்தையிடமிருந்து அவர் பெற்ற முதுசொம் எனலாம்.

ஔமாவும் றோயைப் போலவே தான் தோல்வியையும் தமக்குச் சாதகமான வெற்றியாக மாற்றிவிடக் கூடிய ஆற்றல் கொண்டவள்.

அவர்கள் அகப்பட்டிருந்த சூழலிலும் கூடத் தங்களை உயர்த்தக் கூடிய பலம் வாய்ந்தவர்கள். ஔமாவைப் போலன்றி றோய் மன்னிக்கும் சுபாவமில்லாதவன். கிழவர் பற்றிய நினைவு அவனுக்கு ஆறாத ரணமாகத்தானிருந்தது.

கிழவர் எதையும் போதும் என்று கொள்ளமாட்டார். கம்பீரத்தால் யாரையும் வளைத்துப் போட்டு தன்னை என்றும் மறக்க முடியாத படி மனப்பதிவையுருவாக்கிவிடுவார்.

கல்லூரியில் படிக்கும் போது கூடிய புள்ளிகளைப் பெற்று இரண்டாம் நிலைக்கு வந்தாலும் (2nd class upper division) ஏன் நீ முதலாம் வகுப்பில் தேறவில்லை என்று கேட்டுவிட்டு "நீ ஒரு ஒபாமா" என்பதை மறக்கக் கூடாது என்பார். எல்லாரிலும் பார்க்க மேலானவன் நீ தான் என்பதைக் காட்ட வேண்டும் என்பார்.

தான் சொல்வதை நம்பினார். தன்னால் சாதிக்க இயலாத ஒன்றை நாங்கள் சாதிக்க வேண்டும் என்று எண்ணமாட்டார். பின் குடித்து விட்டு கிடப்பார். கையில் பண மில்லை, பிச்சைக்காரன் இப்படியான கெட்டிக்காரன் எப்படி இந்த நிலைக்கு வரமுடியும்? இந்த கேள்வி றோயை துளைத்தெடுத்தது. பொருள் விளங்காத வாழ்வு?.

"நானாக தனியே வாழத் தலைப்பட்ட போதும் அவர் இறந்துவிட்ட பின்பும் அவரின் வாழ்வு என்ற விடுகதையை என்னால் அவிழ்க்க முடியவில்லை. அவரின் உடலை அவர் பிறந்த கிராமமாகிய அலேகோவுக்கு எடுத்துச் சென்று ஈமக் கிரியைகளைச் செய்யும் பொறுப்பு தலைமகனான என்னைச் சார்ந்ததாயிற்று.

கிறிஸ்தவ வழக்கத்தின் படி அவர் உடல் புதைக்கப்படல் வேண்டும் என்று கூறியது அரசாங்கம். ஆனால் குடும்பம் இஸ்லாமிய சம்பிரதாயத்திற்கேற்ப அவரதுடல் புதைக்கப்படவேண்டும் என்றனர். பல இடங்களிலிருந்து மக்கள் அங்கு திரண்டு விட்டனர்.

லுவோப் பழங்குடி மக்களின் மரபுப்படி மரணச் சடங்குகள் நடந்தன. பெரிய மரக் கட்டையை மூன்று நாட்கள் எரித்தனர். அழுகையும் கவலையும் தொடர்ந்தன. வந்திருந்தவர்களில் பாதிப் பேர்வழிகளை எனக்குத் தெரியாது. அவர்களுக்கு உணவு, பீர் என்று பல செலவுகள் செய்ய வேண்டியிருந்தன. எங்கள் உறவினர்கள் கிழவனின் சொத்துக்களுக்கு சண்டை போட்டனர்.கிழ்வன் கடைசியாக தன் காதலியாக வைத்திருந்தவள் - ஜோர்ஜியின் தாய் தனக்குத் தான் எல்லாப் பொருட்களும் சேர வேண்டும் என்று போட்டி போட்டாள். சில உறவினர்கள் அவளுக்கும் வேறுசிலர் என் தாய்க்கும் ஆதரவு தந்தனர்.

இது பைத்தியக்காரத்தனமென ஒதுக்கி விட்டு அந்த இடத்தை விட்டகன்றேன்.

எனது இளைய சகோதரன் டேவிட் தன் தாயுடன் அமெரிக்காவில் வாழப் பிடிக்காமல் என்னுடன் வந்து சேர்ந்து விட்டான். அவன் தாயுடன் தான் வாழ வேண்டும் என்று அறிவுரை வழங்கினேன். அவன் மறுத்துவிட்டான். தான் ஒரு அமெரிக்கனாக வாழமுடியாது என்றும் ஆபிரிக்கனாகத் தான் வாழப் போவதாக அடம்பிடித்தான். "நான் ஒரு ஒபாமா" என்று பெருமிதத்துடன் கூறினான். (தொடரும்)

**ஜம்பொன்**

## முகாம்களில் வாழும் சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிப்பு

(கொழும்பு)

வவுனியா முகாம்களில் தங்கியிருக்கும் சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப் பட்டிருப்பதாக யுனிசெப் அமைப்பு தெரிவித் துள்ளது.

இந்த முகாம்களில் 3 இலட்சம் மக்கள் தங்கியிருப்பதுடன் இவர்களில் 13 வீதமான வர்கள் 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களெனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சுமார் 10ஆயிரம் சிறுவர்கள் போஷாக் கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கலாமெனவும் யுனிசெப் அமைப்பு குறிப்பிட்டது.

கடந்த மார்ச் மாதம் சிறுவர்களின் நிலைமை தொடர்பில் ஆய்வொன்று நடத்தப்பட்டிருப் பதுடன் 25.5 வீதமான சிறுவர்கள் போஷாக் கின்மையால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் யுனி செப் அமைப்பு கூறியுள்ளது.

முகாம்களுக்குச் செல்லத் தடை விதிக்கப் பட்டிருப்பதால் மக்களின் சகல தேவைகளை யும் நிறைவேற்ற முடியாதிருப்பதாகவும் அந்த அமைப்பு குறிப்பிட்டது.

இதேவேளை வவுனியா முகாம்களில் சன நெரிசல் அதிகமாகவிருப்பதுடன் தொற்று நோய் பரவுவதற்கான ஆபத்துக்கள் காணப்படுவதா கவும் மேர்சி மலேசியா என்ற நிவாரண அமைப்பு கூறியுள்ளது. (ஓ-4)

# வேலை இழந்த 80 ஆயிரம் தொழிலாளர் குறித்து அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை

## வேலையிழந்தோர் தேசிய நிலையம் குற்றச்சாட்டு

இலங்கையில் பொருளாதாரத்திற்குப் பங்களிப்பை வழங்கிய தனியார் தொழிற் துறையைச் சார்ந்த 80 ஆயிரம் தொழிலா ளர்கள் தமது தொழில்களை இழந்துள்ளா தோடு, இவர்களுக்கு சேவைகளை வழங்கிய மூன்று இலட்சம் பேரும் வாழ வழியின்றி நடுத் தெருவில் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இவர்கள் தொடர்பில் அரசாங்கம் எந்தவிதமான நலன்புரிகளையும் முன்னெ டுக்கவில்லை என்று வேலை இழந்தோரின் தேசிய நிலையம் குற்றஞ்சாட்டிறது.

கொழும்பு தேசிய நூலகம் ஆவணவாக் கல் சபை கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட் கிழமை நடத்திய முதலாவது ஊடகவியலாளர் மாநாட்டின் போதே வேலை இழந்தோரின் தேசிய நிலையத்தின் ஏற்பாட்டாளரும், ஜே.வி. பி.யின் மத்திய மாகாண சபை உறுப்பினரு மான வசந்த சமரசிங்க இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது, உலக ப் பொருளாதார நெருக்கடி மற்றும் எமது நாட் டின் நிதி நிர்வாக சீர்கேடு காரணமாக இன்று தனியார் தொழிற்றுறை பாரிய நெருக்கடியை சந்தித்துள்ளது.

80 ஆயிரம் தொழிலாளர்கள் தொழிலை இழந்துள்ளனர். இவர்களுக்கான பாக்கிச் சம் பளம் கொடுக்கப்படவில்லை. மேலும் ஊழியர் சேமலாப நிதி,ஊழியர் நம்பிக்கை நிதிக்கான பங்களிப்புக்களும் செலுத்தப்படவில்லை. இவ்வா றானதோர் சூழ்நிலையில் வாழ்வதற்கு வழியி ன்றி நடுத்தெருவில் வேலையிழந்தோர் தள்ளப் பட்டுள்ளனர். இவர்களுக்கு எந்தவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதில்லை.

இதனைவிட மோசமான நிலைமை என்ன வென்றால் பொருளாதாரத்திற்கு பங்களிப்பைச் செய்த தனியார் துறையினரின் துயர் துடைப் பதற்காக அரசாங்கம் எந்தவிதமான தலையீட் டையும் மேற்கொள்ளவில்லை என்பதேயாகும்.

எனவே தான் நாம் இந்த மத்திய நிலை யத்தை உருவாக்கினோம். இது வரையில் 55 ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதன் காரணமாகவும் பலர் தொழில்களை இழந் துள்ளனர். உலக பொருளாதார நெருக்கடி எம்மைப் பாதிக்காது. ஜோர்ஜ் புஷ்ஷும் மஹிந்த சிந்தனையை படிக்க வேண்டுமென அன்று எமது மத்திய வங்கி ஆளுநரும், அமைச் சர்களும் மார் தட்டினார்கள்.

இன்று ஆயிரக்கணக்கானோர் தொழில் களை இழந்துள்ளனர். இவர்களை பாதுகாப் பதற்கு என்ன திட்டம் உள்ளது என்பதை வெளி யிட வேண்டும். தொழிலிழந்து நெருக்கடி யில் வாழ்பவர்கள் கடந்த காலங்களில் எமது படையினர் மேற்கொண்ட பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அதரவு வழங்கி னர். எனவே தமது பிரச்சினைகளை பெரிது படுத்தவில்லை.

ஆனால் இன்று படையினர் வெற்றி பெற் றுள்ளனர். நாட்டுக்கு வெற்றி கிடைத்துள்ளது. எனவே அரசாங்கம் தொழில் இழந்தவர்களுக் கான நலன்புரிகளை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறானதொரு நிலமை உருவாகுமென்று கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு அரசாங் கத்தற்கு எச்சரிக்கை விடுத்தோம். அதற்காக காப்புறுதித்திட்டமொன்றையும் நிதியமொன் றையும் ஏற்படுத்தும் திட்டத்தையும் அரசிடம் முன்வைத்தோம். ஆனால் எதுவும் முன்னெடுக் கப்படவில்லை.

எதிர்காலத்தில் இந்த நிலைமை மோசமடை யும் எனவே பாதிக்கப்படும் தொழிலாளர்களை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்றார். (ஓ-4)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் கட்டுப்பாடு பாதுகாப்பு அமைச்சின் வசம்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெயர்ந்த ஆயிரக் கணக்கானவர்களுக்கான மனிதநேயப் பணிகளில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டுள்ள நிலையில் அரச சார்பற்ற நிறுவ னங்களின் கட்டுப்பாட்டை பாதுகாப்பு அமைச்சு எடுத்துக்கொண்டுள்ளது.

இதுவரை காலமும் சமூகசேவைகள் அமைச் சின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்த சகல அரச சார்பற்ற நிறுவனங்களும் உடனடியாக அமு லுக்கு வரும் வகையில் பாதுகாப்பு அமைச் சின் கட்டுப்பாட்டின் கீழ் மாற்றப்பட்டுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்களின் அனைத்து நடவடிக்கைகளும் பாதுகாப்பு அமைச்சினால் அவதானிக்கப்படுவதுடன் இவற்றுக்கான கண் காணிப்பு, சட்ட விதிகள் தீவிரமாக்கப் பட்டிருப்ப தாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனமொன்று விடுதலைப் புலி கள் அமைப்பின் ஊடாக அரசாங்க உயர் அதி காரிகள் சிலருக்கு மரண அச்சுறுத்தல் விடுத் தாகக் கூறியே அரச சார்பற்ற நிறுவனங் களை பாதுகாப்பு அமைச்சு தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த ஆயிரக் கணக்கானவர்கள் வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மன்னார் ஆகிய மாவட் டங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அரசாங் கத்துடன் இணைந்து இடம்பெயர்ந்த மக்களுக் கான மனிதநேயப் பணிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுத்து வருகின்றன.

அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கை களைக் கண்காணிப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே நடவடிக்கையெடுத்திருந்ததுடன் வெளிநாடுகளிலிருந்து அரசசார் பற்ற நிறு வனங்களுக்குக் கிடைக்கும் நிதியுதவிகள் மற் றும் அவை பயன்படுத்தப்படும் முறைகள் குறித் தும் கண்காணித்து வருகிறது. (ஓ-4)

# வடக்கு பிரதேசங்களுக்கு செல்ல அரசு அனுமதி அளிக்க வேண்டும்

## ஐ.தே.க. மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்குப் பிரதேசங்களுக்குச் செல்ல இலங்கை அரசாங் கம் அனுமதி வழங்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் தேர்தல்களை முன்னிட்டு பிர தேசங்களுக்கு செல்ல வேண்டிய அவசியம் எழுந் துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

வடக்குப் பிரதேசங்களுக்குச் செல்ல ஐக் கிய தேசியக்கட்சிக்கு அனுமதி வழங்குமாறு தேர்தல் ஆணையாளர் பாதுகாப்புச் செயலாளரி டம் கோரிக்கை விடுக்கவேண்டுமென கட்சி சுட் டிக்காட்டியுள்ளது.

யாழ்ப்பான மாநாகரசபை மற்றும் வவு னியா நகரசபை ஆகிய தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடும் என கட்சியின் பொதுச்செய லாளர் திஸ்ஸஅத்தநாயகக் தெரிவித்துள்ளார்.

வடக்குத் தேர்தல்களை ஒருங்கிணைக் கும் பணிகள் டாக்டர் ஜயலத்ஜயவர்த்தனவிடம் ஒப்படைப்பட்டுள்ளபோதிலும் அவர் வடக்குப் பிர சேத்திற்கு செல்ல அரசாங்கம் அனுமதியளிப் பதில்லை என் அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள் ளார். (ஓ-4)




விஞ்ஞான பீடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -இலங்கை

FACULTY OF SCIENCE

UNIVERSITY OF JAFFNA - SRI LANKA

**மீன் பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி**

**புதிய அனுமதி -2009**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் கீழ் இயங்கும் கடல்வள அபிவிருத்தி நிலையம் தமிழ் மொழி மூலம் நடத்தும் இரண்டு ஆண்டு கால மீன் பிடியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**தகைமையும் தெரிவும்**

✦ பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுடைய எவரும் விண்ணப்பிக்கலாம்

✦ உளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்காணல் மூலமும் திறமை அடிப்படையில் தெரிவு இடம்பெறும்.

கட்டண விபரம் :-

| | |
|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூபா 1000 |
| கற்கைநெறிக் கட்டணம் | ரூபா 30,000 |
| மீளக் பெறக்கூடிய வைப்பு | ரூபா 1000 |

கற்கை நெறிக்கட்டணம் முழுமையாக அல்லது இரண்டு தவணை களில் செலுத்தப்படலாம். பதிவு மேற்கொள்ளும் பொழுது இருபத் திரண்டாயிரம் ரூபாவும், இரண்டாம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்பு பத்தாயிரம் ரூபாவுமாக செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரீட்சைக ளும் அனுமதிகளுக்குமான உதவிப் பதிவாளர் பிரிவில் 100/- கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் உதவிப் பதிவாளர், விஞ்ஞானப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு 03.07.2009 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

*பதிவாளர்*
*09.06.2009*

(சி/2565)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மூளாயூர் அமரர்

## திருமதி பராசக்தி கணபதிப்பிள்ளை

கருவறையில் சுமந்து பெற்று கண்ணிமைக்குள் காத்து
பருவங்கள் தோறுமுயர் பாசங்கள் பொழிந்து
உருவாகி வர எமக்கு உறுதுணைகள் புரிந்து
அருவாயும் உருவாயும் அவனியிலெமைக்காத்து நின்ற
பொருளான பேர் கொண்டார் பராசக்தி எமதன்னை
திருவுடலம் நீத்திறைவன் திருவடியை அடைந்தின்று
ஒருதிங்கள் ஓடியதோ என்று மனம் வாடி
தருகின்றோம் சாந்தி பூசை அம்மா நீர் ஏற்றிடுவீர் !

பாசமுள்ள குடும்பத்தார் சார்பாக
மகன்
க. கணேசலிங்கம்

மூளாய் மத்தி,
சுழிபுரம்.

(சி/2564)

20.திறைசேரி முறிகள்(Treasuary Bord) என்பதனால் கருதப்படுவது யாது?
1.மத்திய வங்கியினால் வழங்கப்படும் குறுகிய கால கடன்பத்திரங்கள்
2.மத்திய வங்கியினால் வழங்கப்படும் நடுத்தர, நீண்டகால கடன் பத்திரங்கள்
3.மத்திய் வங்கியினால் வழங்கப்படும் அந்நிய நாணய வடிவத்திலான கடன் பத்திரங்கள்
4.பணவீக்கத்தினை அதனைக் கட்டுப்படுத்துவற்காக மத்தியவங்கியினால் வெளியிடப்படும் நடுத்தர, நீண்டகால கடன் பத்திரங்கள்
5.மத்தியவங்கியின் பொதுப்படுகடன்திணைக்களத்தினால் அரசிற்கு நிதி பெறுவதற்காக வெளியிடப்படும் நடுத்தர, நீண்டகால கடன்பத்திரங்கள்.

**21-30வரையான வினாக்களுக்கு வெற்றிடத்தில் மிகப் பொருத்தமான சொல்லை எழுதுக.**

21.நுகர்வோரது விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் சமூக முகாமைத்துவ ரீதியான தொழிற்பாடு ........................................ என அழைக்கப்படும்.

22.பொருட்களைப் பெறுவதற்கான கட்டளையனுப்புவதற்கும் பொருள் பெற்றுக் கொள்ளப்படுவதற்கும் இடையிலான காலப்பகுதி ........................................ என அழைக்கப்படும்.

23.மனித, பௌதீக, ஏனைய வளங்களைப் பயன்படுத்தி நிறுவனக்குறிகோளை வினைத்திறனுடன் அடைந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பணி களின் தொகுதி ........................................ என அழைக்கப்படும்.

24.தேறிய இலாபத்துடன் நிலையான செலவினை சேர்த்துப் பெறப்படுவது ........................................ ஆகும.

25.பொருட்கள் சேவைகள் தொடர்பாக நுகர்வோரால் மேற்கொள்ளப்படுகின்ற ஒட்டு மொத்தமான அளவீடு ........................................ என அழைக்கப்படும்.

26.பொருட்கள்சேவைகளின் தரம் தொடர்பான விடயம் கவனம்செலுத்தும் செய்முறை என அழைக்கப்படும்.

27.ஒரு நிறுவனம் தனது ஒவ்வொரு உற்பத்திக்கும் தனித்தனியான அடை யாளங்களைப் பயன்படுத்தினால் அது ........................................ என அழைக்கப்படும்.

28.ஒரு வணிக அமைப்பினுடைய நீண்டகால மூலதனங்களின் தொகுதி ........................................ என அழைக்கப்படும்.

29.நிறுவனமொன்றின் பகிரப்படாத இலாபம் ........................................ நிதி மூலமாக அமையும..

30.உரிமை மூலதனமானது கடன்மூலதனத்தினைவிட அதிகமாக காணப் படுமாயின் அதனை ........................................ என அழைக்கப்படும்.

**31-40 வரையான வினாக்களுக்கு குறுகிய விடையினைத் தருக.**

31.சிறுவணிகமொன்றின் இரு பிரதான பண்புகளைத் தருக.

32.'ஹென்றி மின்ஸ்பேக்" என்பவரது கருத்துப்படி ஒரு முகாமையாளரின் பிரதான வகிபாகங்களைத் தருக.

33.உற்பத்தியுடன் தொடர்புடைய மிகப் பிரதான கிரயங்கள் 02 தருக.

34.உற்பத்தி நிறுவனமொன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு இதனடிப்படையில் இலாப்நட்டமற்ற புள்ளியினைக் கணிப்பிடுக.
விற்பனை அலகுகள் ரூபா 12000
அலகிற்கான விற்பனை விலை ரூபா 140
மூலப்பொருட்கிரயம் ரூபா 60
கூலிக்கிரயம் கிரயம் ரூபா 50
நிலையான கிரயம் ரூபா 66000

35.சந்தைப்படுத்தல் ஆராட்சிக்கு வேண்டிய முதலாந்தரத் தரவுகளைப் பெற் றுக்கொள்ளக்கூடிய முறைகள் 02 தருக.

36.உற்பத்திக் கலவையினை இனங்காண்பதற்கான வழிகள் 02 தருக.

37.சந்தைப்படுத்தல் ஆராட்சியின் படிநிலைகள் 03 தருக.

38.வணிகமொன்று தனது கடன்பட்டோர் மீதியினை ஒப்படைத்து நிதி பெறுவது எவ்வாறு அழைக்கப்படும்?

40.31.03.2009 இல் ABC கம்பனியின் ஐந்தொகை பின்வருமாறு,

| | |
|---|---|
| காணிகட்டிடம் | 100000 |
| இருப்புகள் | 200000 |
| கடன்பட்டோர் | 12500 |
| காசு மீதி | 3500 |
| வங்கிமேலதிகப் பற்று | 4200 |

தொழிற்படு மூலதன விகிதத்தினை கணிக்க.

## வணிகக்கல்வி -11 (பகுதி-11 Business Studies11 ( (part -11)

## 2 மணித்தியாலங்கள் 2 Hours

முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடைதருக.

01.1) முயற்சியாண்மையுடன் தொடர்புடைய பின்வரும் பதங்களை விளக்குக.
அ) புத்துருவாக்கம் (Innovation)
ஆ) முயற்சியாளர்
இ) இலங்கை முயற்சியாளர் விருது(Sri Lanka Entrepreneur ship Award)
2) முயற்சியாளனுடைய சிறப்புப் பண்புகளை 10 (D.S) எனும் அடிப்படையில் குறிப்பிடுக.
3) அ) இலக்கு(Goal),நோக்கம் (Objective) என்பவற்றை விளக்கி வேறுபடுத்துக.
ஆ) வணிகக் குறிக்கோளின் (Objective) சிறப்புப் பண்புகளைத் தருக.
4) அ)உற்பத்தித்திறன் (Productivity), வினைத்திறன் (Effectiveness) என்பவற்றினால் கருதப்படுவது யாது?
ஆ)வணிக அமைப்பொன்றிற்கு மேலுள்ள இரண்டும் ஏன் அவசியமானது எனக் குறிப்பிடுக.
5) உற்பத்தி இயளலவு (Production Capacity), என்பதனை விளக்கி அதனை மேபடுத்துவதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை இனங்காண்க.
6)உற்பத்தி (Product) என்பதனால் கருதப்படுவது யாது? அதன் உள்ளடக கங்கள் எவை எனக் குறிப்பிட்டு விளக்குக.

(3x6= 18 புள்ளிகள்)

02) 1) "SMED" என்பதனால் கருதப்படுவது யாது?
2)அ)ஊழியர் ஊக்கப்படுதல் (Employees-Motivation) என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ) ஊழியர்களை ஊக்கப்படுத்தக்கூடிய முறைகளைக் குறிப்பிட்டு உதாரணம் தருக.
இ)ஊழியர் ஊக்கப்படுத்தல் மூலம் நிறுவனமொன்று பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் எவை?
3)அ)சொத்துப் பராமரிப்பு (Assets Maintenance) என்பதனை விளக்குக.
ஆ)பிரதான பராமரிப்பு முறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்கி உதாரணம் தருக.
4)உற்பத்திப் பொருள் எண்ணக்கரு, விற்பனை எண்ணக்கரு என்பவற்றுக் கிடையிலான தொடர்பினையும் வேறுபாடுகளையும் விளக்குக.
5)அ) ஊழியர் புரள்வு (Employees Turn Over) என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ) ஊழியர் புரள்வு ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?
6) கொழும்புப் பங்குச் சந்தையில் வரையறுத்த கம்பனியொன்று பட்டியலிடு வதற்கான பிரதான பலகைகள் எவை எனக் குறிப்பிடுக

(3x6= 18 புள்ளிகள்).

03) 1)முயற்சியாண்மைச் செயன்முறையுடன் தொடர்புடைய பிரதான காரணி களைக் குறிப்பிட்டு விளக்குக.
2)அ) ஒழுங்கமைத்தல் தொழிற்பாடு (Organizing) என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ)ஒழுங்கமைத்தலுடன் தொடர்புடைய மூன்று பிரதான பணிகளைக் குறிப்பிடுக
3)நிதி முகாமைத்துவம் என்பதனை வரையறுத்து, அதன் பிரதான பணிகளைக் குறிப்பிடுக.
4) அ)சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களின் வரலாற்று ரீதியான வளர்ச்சிக் கட்டங்களைக் குறிப்பிடுக.
ஆ)தேவைகள், விருப்பங்கள், கேள்வி என்பவற்றிற்கிடையிலான தொடர்பினை விளக்குக.

(3x4= 12 புள்ளிகள்)

04) 1)அ)சிறுவணிகம் (Small Business) என்பது யாது? அதன் சிறப்புப் பண்புகள் 04 தருக.
ஆ) சிறுவணிகங்களின் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய தேசிய ரீதியான நன்மைகள் தருக.
2) அ) ஒரு முகாமையாளரிடமுள்ள வலுக்களை (Powers) இனங்காண்க.
ஆ) அதிகாரத்திற்கும் (Authority) வலுவீற்கும் (Powers) இடையிலான வேறுபாடுகள் எவை,?
3) அ)உற்பத்தி நிறுவனமொன்றின் மூலம் இலாபநட்டமற்ற புள்ளி எவ்வாறு கணிப்பிடலாம் என விளக்குக.
ஆ)இலாபநட்டமற்ற பள்ளியினைக் (Break even point) கணிப்பிடுவதன் நன்மைகள் 02 தருக.
4) இலகுசந்தைப்படுததல் (Target Marketing) என்பதனால் கருதப்படுவது யாது?

(3x6= 12 புள்ளிகள்)

05. 1) சந்தைப்படுத்தல் என்பது யாது? அதனுள் காணப்படும் பிரதான பணிகளைக் குறிப்பிடுக.
2) அ) காசுப் பாதீடு தயாரிப்பதன் பிரதான நோக்கங்கள் 02 தருக?
ஆ) காசு உட்பாய்ச்சல்கள், வெளிப்பாய்ச்சல்கள் 03 குறிப்பிடுக.
3) கம்பனியொன்றின் வருடாந்த தேவை 24300 அலகுகள், கட்டளைக் கிரயம்ரூபா 400, பேணும் கிரயம் ரூபா 6 பொருளாதாரக் கட்டளைக் கணியத் தினைக் கணிப்பிடுக.
4) அ) திறைசேரி உண்டியல்கள் தொடர்பாக மீள் கொள்வனவுச்சந்தை என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ) திறைசேரி உண்டியல்களின் மீதான முதலீடு செயற்றிடனுடையதாக இருப்பதற்கான காரணங்கள் எவை?

(3x4= 12 புள்ளிகள்)

06) 1) சந்தைப்படுத்தல் கலவை(Marketing Mix) தொடர்பாக வணிகர், நுகர்வோர் ஆகிய இருதரப்பிலும் உள்ளடங்கும் மாறிகளை ஆராய்க.
2) சந்தைப்படுத்தலில் முழுப்படைப்பு எண்ணக்கரு என்பதால் கருதப்படுவது யாது? அதனுள் அடங்கும் பிரதான கூறுகள் எவை?
3)அ)மிலங்கா விலைச்சுட்டெண் சார்ந்த கம்பனிகளைத்தேர்வு செய்யும் போதுகருத்தில் கொள்ளப்படும் காரணிகளைத் தருக.
ஆ)மிலங்கா விலைச் சுட்டியினுள் காணப்படும் நிதி, காப்புறுதித் துறைச்சார்ந்த இரு கம்பனிகளைக் குறிப்பிடுக.
4) சுருக்கமாக விளக்குக.
அ) கரை கடந்த வங்கிச் சந்தை (Over seas companies)
ஆ) இலங்கை அபிவிருத்தி முறிகள் (Nations Built bonds)
இ) சந்தை மூலதனமாக்கல் (Market capitalisation) (3x4= 12 புள்ளிகள்)

# றோயல் கல்லூரி, கொழும்பு -7

## கல்வி பொதுத்தராதர உயர் தரப் பரீட்சை -2009

## வழிகாட்டல் பரீட்சை

வணிகக்கல்வி -11 (பகுதி - 1) Bsiness Studies-11(Part-I

1 மணித்தியாலம் 1 Hour

01. தொடக்கம் 20 வரையான வினாக்களுக்குமிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1. முயற்சியாண்மை ( Entepreneurship) என்பது தொடர்பான மிகவும் சரியான கூற்றாக அமைவது எது?
   1. வயாபாரமொன்றினை வெற்றிகரமாக ஆரம்பித்து செயற்படுத்தக்கூடிய ஆற்றல்.
   2. நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்ளுதல்
   3. மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையில் நடுவராகத் தொழிற்படுதல்
   4. நுகர்வோரது தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் வகையில புத்துருவாக்கத்தில் ஈடுபடுதல்
   5. பொருளாதாரத்தில் சந்தர்ப்பங்களைக் கண்டறிந்து சாதகமாகப் பயன்படுத்துதல்.
2. முயற்சியாண்மை செய்முறையின் ஒரு பிரதான படிமுறையாகக் கருதக் கூடியது எது?
   1. புத்துருவாக்கம் 2. அடிப்படைகளை உருவாக்குதல் 3. அமுல்படுத்தல் 4. வளர்ச்சி 5. மேற்கூறிய யாவும்.
3. முயற்சியாளர்கள் பிறப்பினால் உருவாகுவது எவ்வாறு அழைக்கப்படும்,
   1. ஆரம்ப முயற்சியாளர்கள் 2. பரம்பரை முயற்சியாளர்கள் 3. உள்ளக ரீதியான முயற்சியாளர்கள் 4. பெண் முயற்சியாளர் 5. சந்தை தூண்டல் முயற்சியாளர்
4. சுய தொழில் முயற்சிக்கும் (SelfEmployment), சிறுவணிகத்திற்கும் இடையிலான (Small Business) பிரதான வேறுபாடாகக் கருதக்கூடியது,
   1. சிறுவணிகமாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் சுயதொழில் முயற்சியாக விரிவாக்கப்படும்.
   2. சுயதொழில் முயற்சியில் சம்பளமற்ற ஊழியர்களும் ,சிறுவணிகத்தில் சம்பளமுள்ள ஊழியர்களும் பணியாற்றுவர்.
   3. சுயதொழில் வணிகத்தில் சிறுவணிகத்தினை விடவும் இலாபம் அதிகமாகக் காணப்படும்.
   4. உள்நாட்டுக் கைத்தொழில்களில் அநேகமானவை சுயதொழில் வணிகமாகவே உருவாக்கப்படும்.
   5. சுயதொழில் வணிகங்கள் சிறுவணிகத்துடன் ஒப்பிடும்போது சுயாதீனமானவையாகும்.
5. வணிக ஒழுங்கமைப்பொன்றிலுள்ள சந்தைப்படுத்தல், நிதி, உற்பத்தி முகாமையாளர்களை எவ்வாறு கருதமுடியும்?
   1. உயர்மட்ட முகாமையாளர்கள்
   2. சிரேஷ்ட மட்ட முகாமையாளர்
   3. நடுத்தர மட்ட முகாமையாளர்கள்
   4. முன் வரிசை முகாமையாளர்கள்
   5. கீழ் மட்ட முகாமையாளர்கள்
6. வனைத்திறனுடைய ஒரு முகாமையாளரிடம் இருக்க வேண்டிய மிகவும் பிரதான திறன்கள் எவை?
   1. அறிவு/திறன் /சாதக மனப்பாங்கு
   2. அறிவு /திறன் /சாதகமான திறன்கள்
   3. அறிவு/ திறன் /விசேட திறன்கள்
   4. எண்ணக்கருத்திறன்/ தொழிநுட்பத் திறன் /மானிடத் திறன்
   5. தொழில்திறன்/ புலனாய்வுத் திறன் / பங்களிப்புத் திறன்
7. நிறுவன இலக்கினையும் குறிக்கோளையும் வினைத்திறனுடன் அடைந்து கொள்ளும் வகையில் அனைத்துப் பிரிவுகளையும் இணைத்துச் செயற்படுத்துவது எவ்வாறு அழைக்கப்படும்?
   1. மையப்படுத்தல் 2. பன்முகப்படுத்தல் 3. திணைக்களப்படுத்தல் 4. கட்டுப்பாட்டு விசால அளவு 5. தொடர்புபடுத்தல்
8. பின்வருவனவற்றுள் கட்டுப்படுத்தலின் Controlling ஒரு படிமுறையாகக் கருத முடியாதது எது?
   1. நியமங்களை உருவாக்குதல்
   2. சாதனைகளை மதிப்பீடு செய்தல்
   3. ஒழுங்கமைப்பினை உருவாக்கல்
   4. விலகல்களை கண்டறிதல்
   5. திருத்தச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்
9. புதிய பொருளொன்றின் உற்பத்தித் திட்டமிடலின் முதலாவது, இறுதியான படிமுறைகளைக் குறிப்பிடுவது எது?
   1. எண்ணக்கருவுருவாக்கம் / மாற்றுவழிகளை ஆய்வு செய்தல்
   2. எண்ணக்கருவுருவாக்கம் / அடிப்படை உற்பத்தித் திட்டம்
   3. எண்ணக்கருவுருவாக்கம் / சந்தைத் தேவைக்கான உற்பத்தி
   4. சூழல் பற்றிய பகுப்பாய்வு / உபதிட்டம் தயாரித்தல்
   5. சந்தைத் தந்திரோபாயம் வகுத்தல் / வணிகப் பகுப்பாய்வு செய்தல்
10. தொகுதி உற்பத்தியாக (Batch Production) கருதப்படுவது எது?
    1. ஒரு சேட்டினைத் தையற்காரரிடம் தைத்தல்
    2. வீடொன்றினை கட்டுதல்
    3. பாடசாலைச் சீருடை உற்பத்தி செய்தல்
    4. எண்ணெய் சுத்திகரிப்புச் செய்தல்
    5. ஆடைத் தொழிற்சாலையில் ஆடை உற்பத்தி செய்தல்
11. உற்பத்தியின் தரத்தினை மேம்படுத்துவதற்கான தொடர் கலந்துரையாடலில் ஊழியர்கள் ஈடுபடுவது,
    1. மொத்தத்தர முகாமைத்துவம் ( Total Quality Managemcnt)
    2. தர வட்டம் (Quality Circle)
    3. ISO - 9001-2006
    4. ISO - 14001
    5. உரிய நேரத் தந்திரோபாயம் (Just in Time)
12. களஞ்சியக் காப்பாளரால் பொருட்கள் வழங்கப்படும் போது பயன்படுத்தப்படும் ஆவணம் எது?
    1. பெட்டி அட்டை (Bin Card)
    2. களஞ்சியப் பேரேடு ( Store Ledger)
    3. அலுமாரி அட்டை ( Rack Sheet)
    4. கொள்வனவுக் கட்டளை ( Purchcse Order
    5. வேண்டுகோள் கட்டளை ( Requisition Sheet)
13. சந்தைப்படுத்தல் எண்ணக்கரு கடைப்பிடிக்கப்பட வேண்டிய நிலைமை எவ்வாறு அழைக்கப்படும்?
    1. தனியுரிமை நிலைமை
    2. மிகைக் கேள்வி நிலைமை
    3. போட்டிச் சந்தை நிலைமை
    4. போட்டியில்லா சந்தை நிலைமை
    5. எதிர்சந்தைப்படுத்தல் நிலைமை
14. சந்தையில் பொருள் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய பிரதான மாறிகள் எவை?
    1. பரிமாற்றம் / பெறுமதி / திருப்தி
    2. கிரயம் /வசதி / தொடர்பாடல்
    3. தரம் / பல்வகைப்படுத்தல் / சமூகப்பொறுப்பு
    4. தரம் /உள்ளடக்கம் /மேம்படுத்தல்
    5. குறிகள் / பொதியிடல் / வடிவமைப்பு
15. பொருட்களுக்கான விலையிடலின போது பின்பற்றும் மிகச் சரியான முறைமை எது?
    1. கிரய அடிப்படை விலையிடல்
    2. கேள்வி அடிப்படை விலையிடல்
    3. தூண்டுதல் அடிப்படை விலையிடல்
    4. கௌரவ அடிப்படை விலையிடல்
    5. மேற்கூறிய யாவும் சரியானது
16. பொருளொன்றின் அத்தியாவசிய நிலைமையினைக் குறிப்பிட்டு விளம்பரப்படுத்தல் செய்வது எவ்வாறு கருதப்படும்
    1. உறுதி செய்யும் விளம்பரம்
    2. வாழ்க்கைச் சாயல் விளம்பரம்
    3. மீண்டும் மீண்டும் விளம்பரம்
    4. உற்பத்தி சார்ந்த விளம்பரம்
    5. தகவல் வழங்கும் விளம்பரம்
17. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றின் உள்ளக ரீதியான நிதி மூலமாகக் கருதப்படுவது எது?
    1. சாதாரணபங்கு வழங்குதல்
    2. முன்னுரிமைப்பங்கு வழங்குதல்
    3. வாடகைக் கொள்வனவு
    4. குத்தகை நிதியிடல் (Leasing)
    5. கடன்பட்டோர் காரணிப்படுத்தல்
18. பின்வருவனவற்றுள் இலாபத்தன்மை விகிதமாகக் கருதமுடியாதது எது?
    1. மொத்த இலாப வீதம்
    2. தேறிய இலாப வீதம்
    3. இருப்புப் புரள்வு விகிதம்
    4. முதலீட்டிற்கான திரும்பல் விகிதம்
    5. உரிமை மீதான திரும்பல் வீதம்
19. கீழ்வருவனவற்றுள் ஒழுங்கமைக்கப்படாத நிதிச் சந்தை முதலீடாகக் கருதக்கூடியது எது?
    1. திறைசேரி உண்டியல்கள் 2. வணிகப் பத்திரம் 3. மத்திய வங்கியின் பிணைகள் 4. தேசிய அபிவிருத்தி முறிகள் 5. மேற்கூறிய எதுவுமில்லை

# சீராக்கும் வாழ்வுதனை கற்றுத்தரும் சிறுவிளையாட்டுக்கள்

(8 ஆம் திகதியின் தொடர்ச்சி)



வாழ்வை சீரமைக்கும் பண்புகளை மிக எளிமையாக கற்றுத்தரும் சிறுவிளையாட்டுக்கள் ஒரு சிலவற்றையும் அவை விளையாடும் முறைகளையும் நோக்குவோம்.

**வேடனும் பறவையும்**
(The Hunter and the Birds)

ஆட்ட அமைப்பு: வகுப்பினில் உள்ள அனைவரையும் விளையாட்டில் இணைத்துக்கொள்ள முடியும். மைதானத்தினை முழுமையாக உபயோகிக்க முடியும். ஒருவர் துரத்தித் தொடுபவராகவும் (it) ஏனையோர் தப்பி ஓடுபவர்களாகவும் இருப்பர். இவ் விளையாட்டில் துரத்துபவர் “வேடன்” ஆகவும் ஏனையோர் பறவைகளாகவும் இடம் பெறுவர்.

ஆடும் முறை:- விசில் ஊதப்பட்டதும் விளையாட்டு ஆரம்பிக்கப்படும். வேடன் முன்னால் செல்ல மற்றைய பறவைகள் அவன் கூடவே செல்ல வேண்டும். முன்னரே தீர்மானித்தவாறு ஒரு குறிப்பிட்ட தூரம் வரை பறவைகளை அழைத்து சென்ற வேடன் தீடீரென் ஓடுங்கள் என்று குரல் எழுப்ப வேண்டும். சத்தம் கேட்டதும் பறவைகள் கலைந்து ஓட வேண்டும். கலைந்து ஓடும் போது வேடனிடம் அகப்படும் பறவை மீண்டும் வேடனாக மாறும். இவ்வாறு தொடர்ந்து விளையாட முடியும்.

**நிழல் ஆட்டம்** (Shadow Tay)

ஆட்ட அமைப்பு -வகுப்பில் உள்ள குழந்தைகள் அனைவரையும் சேர்த்து விளையாட முடியும். மைதானத்தினை வசதிக்கு ஏற்ப பூரணமாகப் பயன்படுத்த முடியும். இதில் ஒருவரை தூரத்துபவராக தெரிவு செய்ய வேண்டும்.

ஆடும் முறை - நல்ல சூரிய வெளிச்சம் உள்ள நேரத்தில் மட்டுமே விளையாட முடியும். விசில் ஊதியதும் விளையாட்டு ஆரம்பமாகும். துரத்துபவர் ஆட்டக்காரர்களை துரத்தி அவர்களின் நிழலிலேயே தொடவேண்டும். யார் நிழலில் மிதிக்கின்றாரோ அவர் அடுத்து துரத்துபவராக மாற்றப்படுவார்.

**வண்ணம் ஐயா வணக்கம்**
(Good morning Tay)

ஆட்ட முறை-குழந்தைகள் அனைவரையும் கைகோர்த்த வண்ணம் பெரிய வட்டமாக நிற்க விடல் வேண்டும் அவர்களில் ஒரு வரை துரத்துபவ ராக தெரிவு செய்ய வேண்டும். மைதான அளவு வசதியின் தன்மையை கொண்டதாக இருக்க வேண்டும்.

ஆடும் முறை - துரத் துபவர் வட்டத்தின் வெளிப்புறமாக நிற்க வேண்டும். விசில் ஊதப்பட்டதும் வட்டத்தின் வெளிப் புறமாக ஓட வேண்டும். ஓடிக்கொண்டிருக்கும் போதே வட்டத்தில் நின்றுகொண்டிருப் பவரில் ஒருவரை தட்டிவிட்டு இருவரும் எதிர் எதிர் திசையாக ஓட வேண்டும். இருவரும் சந்திக்கும் போது கைகளைக் குலுக்கி மூன்று முறை ‘வணக்கம் ஐயா வணக்கம்’ எனக் கூறவேண்டும். பின் னர் வேகமாக ஓடிவந்து வட்டத்தில் உள்ள இடைவெளியில் நிற்க வேண்டும். அவ்வாறு நிற்பவர் வட்டத்துடன் இணைந்தவராவார். எல்லோருக்கும் வாய்ப்பு வரும் வகையில் ஆட்டம் அமைய வேண்டும். இதனை ஆசிரியர் கவனிக்க வேண்டும்.




கீழ்ப்படிவினை வளர்த்துக்கொள்ளல்

**நகரும் சிலைகள்**
(Advancing Stutues)

ஆட்ட அமைப்பு- வகுப்பில் உள்ள அனைவரையும் ஈடுபடுத்திக் கொள்ள முடியும். குறிப்பிட்ட எல்லைக்குள்ளே விளையாட வேண்டும். முதலில் எல்லோரையும் அழைத்து சிலைகள் போல் நிற்க செல்லவும் இதில் கடினமானதாக கருதுவதை ஆட்டதின் போது பயன்படுத்தவும் (உதாரணமாக, யானைதும்பிக்கையை தூக்கி வைத்திருத் தல், கொக்கு போல் நிற்றல்) இதில் ஒருவர் it தெரிவு செய்ய வேண்டும் இவர் சற்று தூரமாக ஏனையோரை பார்க்காது திரும்பி நிற்க வேண்டும்.

ஆடும் முறை- தெரிவு செய்யப்பட்டவர் (it) உரத்த சத்தமான குரலில் 1,2,3...10 வரை சொல்ல வேண்டும். அப்போது ஏனையோர் அவரை நோக்கி வந்து கொள்ள வேண்டும் எண்ணி கொண்டு இருப்பவர் திடீரென 10 என்று கூறியது அனைவரும் அதே இடத்தில் சிலையாக நிற்க வேண்டும். இவ்வாறு உடனே நிற்காதவர்கள், நின்றபின் ஆடி அசைகின்றவர்கள் ஆட்டத்தில் இருந்து வெளி யேற்றப்படுவார். இறுதி ஒருவர் வரைக்கும் ஆட்டம் தொடர்ந்து நடைபெறும்.



அன்பு உணர்வினை வளர்த்துக் கொள்ளல்

**தம்பி ஓடுங்கள் பார்க்கலாம்**
(Pump pump pull away)

ஆடும் முறை -குழந்தைகளை சம குழுக்களாக இரண்டாகப் பிரிக்க வேண்டும். மைதானம் வசதிக்கேற்ப போதுமானது. இரண்டு குழுக்களையும் சிறு இடைவெளியில் எதிர் எதிரே பார்த்தவாறு வரிசையாக நிற்க விட வேண்டும் நடுவில் துரத்துபவரை தெரிவு செய்து நிறுத்த வேண்டும்.

ஆடும் முறை-விசில் ஊதப்பட்டதும் ஆட்டம் தொடங்கப்படும். நடுவில் நிற்கும் (it) “என்னிடம் இருந்து தப்பி ஓடுங்கள்” பார்க்கலாம் என குரல் எழுப்ப வேண்டும் உடனே ஒரு பக்க எல்லை கோட்டில் இருந்து எல்லோரும் மறுமுறை எல்லைக் கோட்டை நோக்கி ஓட வேண்டும். ஓடும் போது துரத்துபவரிடம் பிடிபட்டால் அவரும் சேர்ந்து மற்றவர்களை துரத்த வேண்டும். அப்போது ஆட்டம் தொடரும். இவ்வாறு கடைசி ஒருவரை தொடும் வரை ஆட்டம் தொடர வேண்டும். தப்பி ஓடுபவர்கள் எல்லா இடமும் தப்பி ஓடாது பார்க்க வேண்டும்.

ஏனவே சிறுவிளையாட்டுக்களின் தன்மை, ஆடப்படும் முறைகள் போன்றவற்றை நோக்கும் போது அவை பல்வேறு விதமான சமூகப் பெருத்தப்பாடு கொண்ட நற் பண்புகளை உள்ளடக்கி உள்ளமை புலனாகின்றது. இத்தகை பண்புகள் பொதிந்துள்ள சிறுவிளையாட்டுக்களை பின்பற்றுவதனால் சமூகப் பெருத்தப்பாடு கொண்ட நற்குண இயல்பு கொண்ட மனிதனாக உருவாக முடியும். என்பதில் ஐயம் எதுவும் கிடையாது. எனவே தான் இவ் விளையாட்டுக்கள் குழந்தைகளிற்கு கற்றுத்தரப்படுகின்றது. இதனை பின்பற்றும் போது சமூகம் தானாக சீரடைகின்றது. எனவே இச் சிறுவிளை யாட்டுக்கள் நல்ல சீராக்கும் கல்வியினை உலகுக்கு வழங்குகின்றது என்பதை அறிய முடிகின்றது.

செ.ஜொனிற்ரன்(B.PE.S, M.P.Ed,Mphil)
(உடற்கல்வி)
அண்ணாமலை பல்கலைக்கழகம்


# 31 ஆம் நாள் நினைவினில்

மலர்வு ✦ 23 ✦ 01 ✦ 1924

மறைவு ✦ 11 ✦ 05 ✦ 2009



அமரர்

**வேலுப்பிள்ளை சின்னத்தம்பி**

“தந்தையே என அழைத்திருந்தோம்
தவறுவாய் என நினைக்கவில்லையே”
உனது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

(சி/2563)

திரு. சி.பத்மராஜா (மகன்)
மற்றும் குடும்பத்தினர்.


# டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு மாகாண மட்டத்தில் நடவடிக்கை எடுக்கவும்

## உள்ளூராட்சி அமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது மிகத் தீவிரமாக பரவி வரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த மாகாண சபைகள் ஊடாக விஷேட வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் சகல மாகாண சபைகளினதும் ஆணையாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள அவசர நிலையை கருத்திற் கொண்டு நாட்டிற்கு பாரிய சவாலாக அமைந்துள்ள டெங்கு காய்ச்சலை பரப்பும் நுளம்புகளை கட்டுப்படுத்த தேவையான வேலைத்திட்டங்களை அவசரமாக மேற்கொள்ள சகல அமைப்புக்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தீவிரமாக பரவிவரும் டெங்குக் காய்ச்சலின் தாக்குதலுக்கு உள்ளாகி இதுவரையில் 116 பேர் மரணித்துள்ளதுடன் 9 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பாதிப்பிற்குள்ளாகியும் உள்ளனர்.

எனவே இந்நோயின் அபாய நிலையை அறிந்தும் அவசர நிலையை உணர்ந்தும் டெங்கு நோய் காரணியான நுளம்புகளை இல்லாமல் ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே மாகாண சபைகளும் ஏனைய சுகாதார அமைப்புக்களும் உடனேயே பொது மக்களின் பங்களிப்புடன் புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். (ஓ-4)

## பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவ இந்தியாவும் சீனாவும் உறுதி

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவ இலங்கை அரசுக்கு இந்தியாவும் சீனாவும் உறுதியளித்துள்ளன.

பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு மருத்துவ உதவி தொடரும் என இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தமிழர்களுக்கு உதவுவதற்காக ரூபா 5 கோடி தருவதாக சீனா உறுதியளித்துள்ளதாக இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது. (ஓ-4)

## விவசாய அபிவிருத்திக்கு ஈரானிய அரசு உதவி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் விவசாய மற்றும் கால்நடைப் பண்ணை அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஈரானிய அரசாங்கம் உதவி வழங்க இருக்கிறது. இதற்கமைய ஈரானின் மொஸ்ரஸ் பாஸ் மன்றம் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க நிதி உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கும். இந்த மன்றம் ஈரானிய அரசாங்கத்தின் நேரடி மேற்பார்வையில் செயற்படுகிறது.

இந்த விடயம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் மிலிந்த மொறகொட மன்றத்திற்கும் ஈரானிய மன்றத்திற்கும் இடையில் ஜெகானில் சமீபத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (ஓ-4)

# நலன்புரி கிராமங்களில் தொழிற்பயிற்சி நிலையங்களை நிறுவ நடவடிக்கை

(கொழும்பு)

வவுனியாவிலுள்ள நலன்புரிக் கிராமங்களில் இரண்டு வாழ்க்கைத் துணை தொழில் பயிற்சி நிலையங்களை நிறுவ தொழில்சார் தொழில்நுட்ப பயிற்சி அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் ஊடகச் செயலாளர் நிமால் பெரேரா தெரிவித்தார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவிலுள்ள நிவாரணக் கிராமங்கள், நலன்புரி நிலையங்கள் மற்றும் இடைத்தங்கல் முகாம்கள் என்பவற்றில் தங்கியுள்ள இளைஞர், யுவதிகள் ஆற்றல்களை விருத்தி செய்யும் பொருட்டும், எதிர்காலத்தில் சிறந்த தொழில் வாய்ப்பை அவர்கள் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் பொருட்டும் இத்தொழில் பயிற்சி நிலையங்கள் நிறுவப்படவுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன் இவ்வாறான தொழில் பயிற்சி நிலையமொன்று ஏற்கனவே கதிர்காமம் நிவாரணக் கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டு 400 மாணவர்கள் பயிற்சிக்காக உள்வாங்கப்பட்டும் உள்ளனர்.

கடந்த 30 வருட காலமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட மக்கள் பயங்கரவாதப் பிடிக்குள் சிக்குண்டுள்ளதால் எந்தவொரு தொழில் பயிற்சியையும் அவர்களால் பெற முடியவில்லை.

தற்போது உள்ளக இடம்பெயர்வுக்கு உள்ளாகியுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுவதன் மூலம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் அவர்களின் ஆற்றல்களையும் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டார்.

இவற்றை மையப்படுத்தி, இரண்டு வாழ்க்கைத் துணைத் தொழிற்பயிற்சி நிலையங்களை நிவாரணக் கிராமங்களில் நிறுவ உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தொழில்கள் தொழில்சார் தொழிற்பயிற்சி அமைச்சர் பியசேன கமகே தொழில்சார் பயிற்சி அதிகார சபையைப் பணித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் மனித வள மேம்பாட்டு விருத்தியை நோக்காகக் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள இளைஞர், யுவதிகளின் மனித வள ஆற்றலை விருத்தி செய்யும் திறமை மிக்க தொழில் நுட்பவியலாளர்களை இவ்விரு மாகாணங்களிலிருந்து உருவாக்கவுமென வாழ்க்கைத்துணை தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பன நிறுவப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார். (ஓ-4)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும்



மலர்வு ♦ 30 ♦ 04 ♦ 1944

உதிர்வு ♦ 12 ♦ 05 ♦ 2009

அமரர்

### விநாசித்தம்பி - பூதத்தம்பி

(வாழைப்பழக் கடை சாமி அப்பா)

அன்பு வார்த்தைகளால் அனுதினமும்
எம்மை அரவணைத்த உறவே
கடல் அலைகள் ஓய்ந்தாலும் - உங்கள்
நினைவலைகள் ஓயாது - எம் நினைவில்
முப்பத்தொரு நாட்கள் சென்றாலும்
அகலவில்லை உங்கள் நினைவுகள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 12.05.2009 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் 11.06.2009 நாளை வியாழக்கிழமை காலை 6 மணிக்கு பருத்தித்துறை தெணியம்மன் ஆலயத்திலும் தொடர்ந்து எமது இல்லத்தில் மு.ப. 11 மணிக்கு வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் நடைபெறவுள்ளது. மேற்படி நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

பூதராயர் ஒழுங்கை,
பருத்தித்துறை.

தகவல் : வி. இராமச்சந்திரன் (சோதி பழக்கடை)

(2823)


## இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து பிரிட்டன் வாழ் தமிழ் மக்களுக்கு விளக்கமளிக்கவும் இலங்கை அரசு பிரித்தானிய கட்சிகளிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து பிரித்தானியாவில் வாழ்கின்ற தமிழ் மக்களிடம் விளக்குவதற்கு பிரித்தானியக் கட்சிகளிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை வெளிவிகார அமைச்சின் ஊடாகவே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு பிரித்தானியாவின், லிபரல் ஜனநாயகக் கட்சி மற்றம் கன்சவேட்டிவ் கட்சி ஆகியவற்றிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்களிடம் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து விளக்குவதற்காக பிரித்தானியாவின் லிபரல் ஜனநாயகக் கட்சி மற்றும் கன்சவேட்டிவ் கட்சி ஆகியவற்றிடம் இலங்கை வெளிவிவகார அமைச்சர் உதவியைக் கோரியுள்ளதாகவும், இதற்கு அந்தக் கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அமைச்சர் ரோஹித போகொல்லாகம, லிபரல் ஜனநாயகக் கட்சியின் வெளி விவகாரங்களுக்கான உறுப்பினர் வில்லியம் ஹொக், கன்சவேட்டிவ் கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான உறுப்பினர் எட்வர்ட் டேவிட் ஆகியோரை லண்டனில் தனித்தனியாகச் சந்தித்து இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயாந்த மக்களுக்கு அரசாங்கம் அளித்து வரும் வசதிகள், வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இந்தச் சந்திப்பின் போது அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

அத்துடன்,13 ஆவது அரசியல் திருத்தத்தின் அடிப்படையில் அரசியல் தீர்வொன்றை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும்அவர் கூறியுள்ளார். இந்த நிலையில், வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திப் பணிகளுக்கு பிரித்தானியா உதவிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக லிபரல் ஜனநாயகக் கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான உறுப்பினர் வில்லியம் ஹொக், கன்சவேட்டிவ் கட்சியின் வெளிவிவகாரங்களுக்கான உறுப்பினர் எட்வர்ட் டேவிட் ஆகியோர் தெரிவித்துள்ளனர். (ஓ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## தேள் கொடுக்குப் பூண்டு

Botanical Name - Heliotropium indicum
Family - Boraginaceae
Engl - Heliotrope
Sing - Et-honda

இது ஓர் பருவக்குறுஞ்செடி. கிளைகளின் மீது நீட்டிக் கொண்டிருக்கும் கெட்டியான தூவிகள் பரவிக் காணப்படும் ; இலைகள் முட்டைவடிவின ; மடல்களின் விளிம்பு ரம்பம் போன்று இருக்கும் ; அடிப்பகுதி வட்டவடிவம் அல்லது இதயவடிவில் காணப்படும், மலர்கள் காம்பற்றவை, இலைக்கு எதிரான கொத்தாக அமைந்தவை ; மஞ்சரி நுனியில் மொட்டுகளும் அடியில் கனிகளும் காணப்படும் ; நுனி வளைந்து கொடுக்குப் போல் இருக்கும். எனவே இத்தாவரம் தேள்கொடுக்குப் பூண்டு எனப்படுகின்றது. மலர்கள் வெண்மை நிறம் ; கனிகள் முட்டைவடிவின; வரிப்பள்ளங்கள் கொண்டவை. இலை இருவிதைகள் கொண்டு இரண்டு கூரான பகுதிகளாக பிரிப்பவை ; விதைகள் வெள்ளை நிறம் கொண்டவை, ஆண்டு முழுவதும் மலர்கள் தோன்றுகின்றன.

### பரம்பலும், இனவிருத்தியும்

யாழ் மாவட்டத்தில் தரிசு நிலங்களிலும், சாலை ஓரங்களிலும், தோட்ட வரம்புகளிலும் அதிகமாகப் பரம்பிக் காணப்படும். விதைகள் மூலம் இனவிருத்தியடையும்.

இதில் பெருந்தேட்கொடுக்கு, சிறுதேட்கொடுக்கு என இரு வேறு சிற்றினங்களைக் கொண்டது. பெருந்தேட் கொடுக்கிற்கு 'சுடுகாடு மீட்டான்' என்ற வேறு பெயரும் உண்டு. உடற்றாதுக்களை அழிக்கும் நுண்கிருமிகளை பெருந்தேட்கொடுக்கு அகற்றும் ஆற்றலுடையது.

### மருத்துவப் பயன்கள்

◆ இதன் இலைகளின் கசாயம் காய்ச்சல் மற்றும் தோலில் ஏற்படும் வீக்கத்துடனான நமைச்சலைப் போக்குகின்றது.



◆ இதன் இலையை மஞ்சள் சிறிது சேர்த்தரைத்து சொறி, சிரங்கு, புண் ஆகியவற்றின் மீது இரவில் பற்றுப்போல் போட்டு காலையில் எழுந்ததும் சீயாக்காய் பொடியுடன் தேய்த்து குளித்துவர படிப்படியாக குணம் காணலாம்.

◆ இதன் இலையை மிளகு ஆறு, சீரகம் ஒரு சிட்டிகையுடன் சேர்த்தரைத்து நெல்லிக் காயளவு சாப்பிட்டு ஆட்டுப்பால் ஒரு குவளை குடித்துவர எலும்புருக்கி நோய் தணியும்.

◆ சிறு தேட்கொடுக்கு அல்லது பெருந்தேட்கொடுக்கு இலையை அரைத்து முகப்பரு, புண், அடிபட்ட புண் ஆகியவற்றிற்கு பூசலாம்.

◆ இலையை மட்டும் கந்தமாக அரைத்து தினம் காலையில் வெறும் வயிற்றில் 3 நாட்கள் சாப்பிட்டு வர காய்ச்சல் தணியும்.

◆ பனிமழைக் காலங்களில், குளிர்ச்சியான உடல் வாகு கொண்டவர்கட்கும் அடிக்கடி ஏற்படும் றொன்சில், தொண்டைப்புண், தொண்டைக்கட்டு ஆகியன நீங்கிட இதன் இலையையும், பூவையும் குடிநீராக்கி அடித் தொண்டையில் படும்படி நன்றாக 2 மணி நேரத்திற்கு ஒரு முறை வாய்கொப்பளிக்க அவை குணமாகும்.

◆ இதன் காயை நசுக்கி, குடிநீராக்கி தினம் காலை, மாலை இருவேளை குடித்துவர ஆஸ்மா குணமடையும்.

◆ இதன் இலை, பூ, க்காய் ஆகிய மூன்றையும் வில்வ இலையுடன் சேர்த்து குடிநீராக்கி தினம் ஒருவேளை தொடர்ந்து அருந்திவர ஆரம்பநிலையிலுள்ள குட்ட நோய் தணியும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

◆ தேள் கொட்டிய இடத்தில் இதன் இலைச்சாற்றை பிழிந்து நன்றாக பூசிவர நஞ்சு தணியும்.

◆ தேள்கொடுக்கு இலைச்சாற்றிற்கு சம அளவு தேங்காய் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சி முகப்பருவிற்கு பூசி வர முகப்பரு நீங்கும். தோல் பளபளப்பாக வரும். ●●●

## யுத்தம் முடிபடைந்ததும் இனப்பிரச்சினை தீரவில்லை

(கொழும்பு)

யுத்தம் நிச்சயமாக முடிபடைந்து விட்டது. ஆனால் இனப்பிரச்சினை முடிபடையவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவருமான பஷீர் ஷேகுதாவூத் தெரிவித்தார்.

காத்தான்குடி நகர சபையினால் நடத்தப்பட்ட சுயதொழில் பயிற்சியை முடித்தவர்களின் கைப்பணிக் கண்காட்சியினை கடந்த சனிக்கிழமையன்று காலை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் தவிசாளர் பஷீர் ஷேகுதாவூத் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்துரையாற்றிய பஷீர் சேகுதாவூத், யுத்தம் முடிந்து விட்டது. இனி யுத்தம் மீண்டும் வராது. ஆனால் முப்பது ஆண்டுகளாக இன்னும் இனப்பிரச்சினை முடிவுக்கு வரவில்லை. சிறுபான்மை மக்களின் அதிகாரப் பரவலாக்கல் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை.

யுத்தம் முடிபடைந்துள்ள நிலையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும் என்பது மிக முக்கியமான ஒன்றாகும் என்று தெரிவித்தார். (ஓ-4)

காரியம் நடந்த பிறகு யோசனை சொல்வது அறுவடைக்கு பின்பு மழை பெய்வது போலாகும்.

~ ஹாலந்து

வலம்புரி

## அவர் சொன்னதை நாம் சொன்னால் பாவம்

பிரதம நீதியரசராக இருந்த சரத் என்.சில்வா கடந்த 7ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார்.

இலங்கையின் நீதித்துறையில் பலர் பிரதம நீதியரசராக இருந்த போதிலும் சரத் என்.சில்வா அவர்கள் அரசியலில் முக்கியம் கொடுத்து பேசும் ஒருவராக இருந்தார்.

அவரை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி படாத பாடுபட்டபோதிலும் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க அம்மையார் அதற்கு இணங்காமையினால் ஓய்வு பெறும் காலம் வரை அவர் பிரதம நீதியரசராக பதவி வகித்தார்.

இந்தியாவில் தேர்தல் ஆணையாளராக இருந்த ஷேசன் அந்நாட்டு அரசியலில் பரபரப்பாக பேசப்பட்டது போல,இந்நாட்டில் பிரதம நீதியரசராக இருந்த சரத் என்.சில்வாவும் அரசியலில் பரபரப்பாகப் பேசப்பட்டவர்.

அதுமட்டுமன்றி வடக்குக் கிழக்கு இணைப்பு சட்ட ரீதியில் செல்லுபடியற்றதென்ற தீர்ப்பையும் வழங்கியவர்.

வடக்குக் கிழக்கு இணைப்பிற்கு எதிராகப் பலர் வழக்குத் தாக்கல் செய்த போதிலும், அதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள்–பிரதம நீதியரசர்கள் அந்தச் சிக்கலான பிரச்சினையில் கைவைத்து நிலைமையைக் குழப்ப விரும்பாமல் தீர்ப்பை ஒத்தி வைப்பதிலேயே ஆர்வம் காட்டினர்.

ஆனால் பிரதம நீதியரசராக இருந்த சரத் என்.சில்வா வடக்குக் கிழக்கைப் பிரித்து தீர்ப்பு வழங்க,அரசு வடக்கையும் கிழக்கையும் தனியாக்குவதில் வேகமாகச் செயற்பட்டது.

இந்நிலைகள் இன்னும் ஐம்பது,அறுபது வருடங்களில் எவ்வாறு அமையும் என்பதைச் செய்தவர்களும்,தீர்ப்பளித்தவர்களும்,இதை எழுதும் நாமும் பார்க்க முடியாதாயினும் எங்கள் நிஜ வாழ்வில் நடந்த விரக்தியான–சோகமான–துன்பகரமான அனுபவங்களை எங்கள் எதிர்கால சந்ததியும் அனுபவிக்க போகின்றது என்னும் ஏக்கம் நெஞ்சை இறுக்குகிறது.

நடந்ததெல்லாம் தமிழருக்கு நெஞ்சையிறுக்கும் நிகழ்வுகள் என்பதால் அவைபற்றி எல்லாம் கவலை கொள்வதற்கு இடமே இல்லை என்ற நிலையில்,

பிரதம நீதியரசராக இருந்து ஓய்வு பெற்ற சரத் என்.சில்வா அவர்கள் வவுனியாவுக்குச் சென்று அங்குள்ள முகாம்களில் தங்கியுள்ள மக்களைப் பார்த்துவிட்டு,

இந்த மக்கள் படும் துன்பங்கள் நீங்குவதற்கு இலங்கைச் சட்டத்தில் இடம் இல்லை என்று பகிரங்கமாக–பட்டவர்த்தனமாக கூறினார் அல்லவா?

அதுவே அவர் பிரதம நீதியரசராக இருந்த காலத்திலெல்லாம் வழங்கிய தீர்ப்புகளில் முதன்மையானதாகும்.

எனினும் இதனை நாம் சொன்னால் பாவம்.

# நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு நீரும் சுகாதார வசதிகளுமே சவாலாகவுள்ளது

## ஐ.நா.சபையின் மனிதாபிமான விவகார இணைப்பகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கான நீர் மற்றும் சுகாதார சேவைகளை நிறைவேற்றுவதிலேயே சவால்கள் எதிர்கொள்ளப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகார இணைப்பகம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான மலசல கூடங்களில் அரைவாசியே தற்பொழுது நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டிருப்பதுடன்,இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கத் தேவையான இடங்களில் 75 வீதமான இடங்களே தற்பொழுது அமைத்துக் கொடுக்கப்பட்டிருப்பதாக மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதார வசதிகள் மற்றும் நீர் வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதிலேயே பாரிய சவால்கள் எதிர்கொள்ளப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இடம்பெயர்ந்து வந்திருக்கும் 2 இலட்சத்து 80 ஆயிரம் பேரைத் தங்கவைப்பதற்கு 6ஆயிரத்து 500 அவசர கூடாரங்களும் 13 ஆயிரம் கொட்டகைகளையும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் அமைத்துக் கொடுத்திருப்பதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன்,இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு 2 ஆயிரத்து 200 மெகாதொன் உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதநேயப் பிரிவு அறிவித்துள்ளது. குறிப்பாக குறைந்த நிறையுடைய குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

2009ஆம் ஆண்டு இலங்கையின் பொதுவான மனித நேயத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியுதவியில் 40 வீதமான 155 மில்லியன் அமெரிக்க டொலர் ஜூன் மாதம் 5 ஆம் திகதிவரை செலவிடப்பட்டிருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை,பெரும் எண்ணிக்கையான மக்கள் வவுனியாவின் மெனிக்பாம் நலன்பரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருப்பதால் அங்குள்ள அனைவருக்கும் போதியளவு மலசல கூடங்கள் அமைக்கப்படவில்லையெனவும், இதனால் அங்குள்ள மக்கள் மத்தியில் சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுவதாகவும் தெரிய வருகிறது.

சுகாதாரப் பிரச்சினைகள் காணப்படுவதால் முகாம்களிலுள்ள மக்கள் மத்தியில் தொற்றுநோய்கள் பரவியிருப்பதாகவும், இதனால் பலர் நாளாந்தம் உயிரிழந்து வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், இந்தத் தகவல் அரசாங்கத் தரப்பிலோ அல்லது வைத்தியசாலை வட்டாரங்களிலோ உறுதிப்படுத்தப்படவில்லை எனத் தெரிய வருகின்றது.

(ஓ-4)

## 540 கஞ்சாக்கன்றுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

540 கஞ்சாக் கன்றுகள் கோப்பாய் பொலிஸாரால் நேற்று உரும்பிராய் பிரதேசத்தில் கைப்பற்றப்பட்டது.

உரும்பிராய்ப் பகுதியில் கஞ்சாத் தோட்டம் உற்பத்திசெய்து வளர்க்கப்படுவதாகத் தகவல் அறிந்த பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை உரும்பிராய் தெற்கு யோகபுரம் பகுதியில் வீட்டிற்கு அருகாமையில் உள்ள மறைவிடமான காணி ஒன்றில் 3 அடி உயரமான 540 கஞ்சாக்கன்றுகள் பயிரிடப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் அக் கஞ்சாத்தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த பிரஸ்தாப நபர் ஒருவரைக் கைது செய்து யாழ்ப்பாண நீதி மன்றத்தில் ஆஜர் செய்தனர். இச் சந்தேக நபரை விசாரணை செய்த நீதிவான் ஆர்.வசந்தசேனன் பிரஸ்தாப நபரை எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஓ-7)

## அமைச்சரவையை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை

(கொழும்பு)

ஆறாவது பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 2010ஆம் ஆண்டுடன் நிறைவடைய இருக்கின்ற நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவையில் மீண்டும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு கலந்துரையாடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.வெற்றிடம் நிலவுகின்ற அமைச்சுகளுக்கு புதிய அமைச்சர்களை நியமிப்பதற்கும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்ற தேசிய சுதந்திர முன்னணிக்கு அமைச்சு பதவிகள் இரண்டினை வழங்கும் நோக்கிலேயே அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் யோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவை மாற்றத்தின் போது வெற்றிடம் நிலவுகின்ற நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு, தபால் தொலைத்தொடர்பு மற்றும் நெடுஞ்சாலைகள் ஆகிய மூன்று அமைச்சுகளுக்கும் புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் விமல் வீரவன்ச தலைமையிலான குழுவிற்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவியொன்றும் மற்றுமொரு அமைச்சு பதவியும் வழங்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய சுதந்திர முன்னணிக்கு வழங்கப்படவிருக்கின்ற அமைச்சு பதவிகள் தொடர்பில் அக்கட்சிக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் அடுத்த வாரமளவில் முக்கிய சந்திப்பொன்றும் இடம்பெறவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச வெளிநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளமையினால் அவர் நாட்டிற்கு திரும்பியதன் பின்னர் ஜனாதிபதியுடனான சந்திப்பு இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-4)

## கல்வியியல் முதுமாணி கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்விப் பீடத்தால் நடத்தப்படும் கல்வியியல் முதுமாணி (M.Ed) கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் இளமாணிப்பட்டம் ஒன்றுடன், கல்வியியல் பட்டபின் படிப்புகள் டிப்ளோமாவில் சிறப்புச் சித்தி பெற்றிருக்கவேண்டும் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவு செய்திருப்பதுடன் அடைவு மட்டம் ஐந்திற்கு(05) மேற்புள்ளிகளைப் பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களினை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க முடியும் என பிராந்திய இணைப்பாளர் கி.கந்தவேள் அறிவித்துள்ளார். (ச)

## முகாம்களிலுள்ள இளைஞர்கள் எவரும் காணாமல் போகவில்லை

### மேஜர் ஜெனரல் சந்திரசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் இளைஞர்கள் எவரும் காணாமல் போகவில்லையென வடபகுதியில் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான விடயங்களைக் கையாளும் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கூறினார்.

நலன்புரி நிலையங்களிலுள்ள மக்கள் மோசமான சூழ்நிலையில் வாழ்வதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை மறுத்திருக்கும் அவர், முகாம்களிலிருந்து இளைஞர்கள் எவரும் காணாமல் போகவில்லையெனத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழ்நிலையை உறுதிப்படுத்தும் சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

அத்துடன் பாதுகாப்புத் தரப்பினரிடம் சரணடைந்தவர்கள் நன்றாகப் பராமரிக்கப்பட்டு வருவதுடன் புனர்வாழ்வளிப்பதற்கு முன்னர் அவர்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாக மேஜர் சந்திரசிறி தெரிவித்தார்.

யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியாகவிருந்த மேஜர் ஜெனரல் சந்திரசிறி அங்கிருந்து கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த வடபகுதி மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்கள் மீளக் குடியமர்த்தப்படும் வரையான அனைத்து நடவடிக்கைகளும் இராணுவ உயரதிகாரியான மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் கட்டுப்பாட்டின் கீழேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.(ஓ-4)

## சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு தியாகம்



உனக்கு கிடைக்கும் நிறம் பச்சையோ நீலமோ சிவப்போ என்பதைப் பொருட்படுத்தாதே. எல்லா வண்ணங்களையும் ஒன்றாகக் குழைத்து, அன்பின் வண்ணமாகிய வெண்மையெனும் பெருஞ்சோதியை உண்டாக்கு. செயல் புரிவதே நமக்குரியது. பயன்கள் தம்மைத்தாமே கவனித்துக் கொள்ளட்டும்.

உலகத்தில் கொடுப்பவனின் நிலையில் எப்போதும் நில் .ஒவ்வொன்றையும் கொடுத்துவிடு; பதிலாக ஒன்றையும் எதிர்பாராதே. அன்பைக்கொடு , உதவியைக் கொடு, பணியைக்கொடு உன்னால் இயன்றளவு சிறிதாவது கொடு. ஆனால் விலைபேசுவதை ஒழித்துவிடு.நிபந்தனைகளை ஏற்படுத்தாதே. நம் மீது நிபந்தனையொன்றும் சுமத்தாமல் , இறைவன் நமக்குக் கொடுப்பது போல, நமது தாராள குணத்தால் நாமும் கொடுப்போமாக.

## ராமேஸ்வர மீனவர்கள் 9 பேர் சிறைபிடிப்பு

(ராமேஸ்வரம்)

ராமேஸ்வர மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க சென்றனர் அப்போது 2 விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்தனர்.

மேலும் விசைப் படகுகளில் இருந்த 9 ராமேஸ்வர மீனவர்களையும் கைது செய்து அழைத்து சென்றுவிட்டனர்.

இந்த தகவலை கரைக்கு திரும்பிய மீனவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட 9 மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கும்படி அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-4)

# இலங்கை அரசு நடத்தி முடித்திருப்பது திட்டமிட்ட இனப்படுகொலை

## அமெரிக்க பேராசிரியர் போய்ல்

(சென்னை)

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக அந்நாட்டு அரசும் அதன் இராணுவமும் திட்ட மிட்ட இனப் படுகொலையை நடத்தி முடித்துள்ளன என்று அமெரிக்காவின் இல்லினாய்ஸ் பல்கலை சட்டக் கல்லூரியின் சர்வதேச சட்டங்கள் துறைப் பேராசிரியர் பிரான்சிஸ் போய்ல் கூறியுள்ளார்.

சென்னையில் பன்னாட்டுத் தமிழர் நடுவம் இலங்கைத் தமிழர் புனர்வாழ்வு என்ற தலைப்பில் நேற்று முன்தினம் நடத்திய ஒரு நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய பேராசிரியர் போய்ல்,


தமிழர்களுக்கு எதிராக் நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதலின் வாயிலாகவும் அவர்களை பட்டினிப் போட்டுக் கொல்வதன் மூலமும் நோயை ஏற்படுத்தும் சூழலை உருவாக்கியும் அளவிற்கு அதிகமான மக்களை முகாம்களில் முடக்கி வைத்து அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை போதுமான அளவிற்கு அளிக்காமலும் ஒரு திட்டமிட்ட இனப்படு கொலையை இலங்கை அரசு நடத்தியுள்ளது.

இலங்கை அரசு தனது முப்படைகளையும் கொண்டு நடத்திய படுகொலை ஐ.நா. உறுப்பு நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்ட 1948 ஆம் ஆண்டின் இனப் படுகொலைக்கு எதிரான உடன்படிக்கை விதி 2 இன் கீழ் திட்டமிட்ட இனப்படுகொலையே. இதன் அடிப் படையில் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் அந்நாட்டிற்கு எதிராக வழக்குத் தொடர முடியும்.

பொஸ்னியாவின் சிறிபிரிகாவில் சேர்பிய படைகள் நடத்திய தாக்குதலில் 8 ஆயிரம் அல்பெனிய இனத்தவர்கள் கொல்லப் பட்டனர். அதனை ஐ.நா.வும் மேற்கத்தைய நாடுகளும் இனப் படுகொலை என்று ஒப்புக் கொண்டன.

அதனைப் போன்று 6 மடங்கு அப்பாவித் தமிழர்களை கடந்த ஜனவரியில் இருந்து 5 மாதத்தில் கொன்று குவித்துள்ளது இலங்கை அரசு. ஆனால் அதனை ஐ.நா.வோ அல்லது மேற்கத்தைய நாடுகளோ இனப் படுகொலை என்று கூறாதது ஏன்?

இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக நடத்திவரும் இனப்படுகொலை தொடர்வதையே முகாம்களில் அடைக்கப்பட்டிருந்த 13 ஆயி ரம் பேருக்கு மேல் காணாமல் போயிருப்பது காட்டுகிறது என்று கூறிய போய்ல் இது மானுடத்திற்கு எதிரான குற்றமாகும் என்று கூறினார். சற்றேகுறைய 3 இலட்சம் பேரை அடிப்படைத்தேவைகள் எதுவும் அளிக்காமல் முகாம்களில் அடைத்து வைத்திருப்பது அவர்களையும் அழித்துவிட வேண்டும் என்ற திட்டத்தில் தான் என்றும் போய்ல் கூறினார்.



இலங்கை அரசினால் கடந்த 60 ஆண்டுகளாக இன வேற்றுமைக்கும் படுகொலைக்கும் உட்படுத்தப்பட்டு வரும் தமிழர்கள் அந் நாட்டில் இருந்து பிரிந்து சென்று தனி நாடு அமைத்துக்கொள்ளும் சுய நிர்ணய உரிமைக்குத் தகுதியானவர்களே என்று கூறிய போய்ல் ஐ.நா. சபை ஏற்றுக்கொண்ட சுய நிர்ணய உரிமை தொடர்பான ஒப்புதல் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்று என்று கூறினார்.

இலங்கை அரசினால் வேறுபட்ட மக்களாக புரிந்து கொள்ளப்பட்டுள்ள தமிழ் மக்கள் அந்நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருந்து துரத்தப்பட்டும் வருகிறார்கள். அதன் திட்டமிட்ட இனப்படு கொலைக்கு ஆளாகி வருகின்றனர். அவர்களின் தனித்த அடையாளங்களை அந்நாட்டு அரசு அழித்து வருகிறது. அவர்களின் சமூக அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன.

இப்படிப்பட்ட சூழலில் தமிழர்கள் தங்கள் சமூக, அரசியல், பொருளாதார உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளவும் தங்களுடைய இன அடையாளங்களை காத்துக்கொள்ளவும் தங்களுக்குள்ள சுய நிர்ணய உரிமையைப்பயன்படுத்தி தனி நாட்டை பிரகடனம் செய்ய முடியும் என்று கூறிய பேராசிரியர் போய்ல்,

அமைதி பேச்சுவார்த்தை நடந்த காலத்திலும் இலங்கை அரசமைப்பை கூட்டாட்சி ஆக்க அந்நாடு ஒப்புக்கொள்ளாத நிலையில் ஒரு சுதந்திர அரசை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமை அவர்களுக்கு உண்டு என்று கூறினார்.

சேர்பியாவின் ஆதிக்கத்திலிருந்தும் இன ஒடுக்கலில் இருந்தும் பிரிந்து சென்று பிரகடனம் செய்யப்பட்ட கொசோவோவிற்கு எந்தெந்த சர்வதேச சட்டங்கள் பொருந்தினவோ அவையனைத்தும் ஈழத் தமிழர்களுக்கும் பொருந்தும் என்று பிரான்சிஸ் போய்ல் கூறினார். (ஓ-4)

## குடிகார வாலிபரின் தலையில் 500 புழுக்கள் டாக்டர்கள் அவற்றை அகற்றி சாதனை

(மும்பை)

மும்பையை சேர்ந்தவர் போளு(26) ரோட்டோரம் குடியிருப்பவரான இவர் போதைக்கு அடிமையானவர். கீழே விழுந்ததில் இவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. எனவே சிகிச்சைக்காக மும்பையில் உள்ள அரசு ஆஸ்பத்திரிக்கு வந்தார். புற நோயாளிகள் பிரிவில் சிகிச்சைக்காக வந்த இவரை டாக்டர்கள் பரிசோதித்தனர். அவரது தலையில் இருந்த காயத்தை நர்சுகள் சுத்தம் செய்தனர். அப்போது தலையில் டென்னிஸ் பந்து அளவுக்கு ஒரு ஓட்டை இருப்பது தெரிந்தது.

உடனே அவருக்கு தலையில் சி.டி.ஸ்கேன் எடுத்து பார்க்கப்பட்டது. அந்த காயத்துக்குள் புழுக்கள் குடைந்து கொண்டிருப்பது தெரிந்தது. இதைப்பார்த்த அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இதையடுத்து போளுவை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்து ஆபரேசன் செய்தனர். இதன் மூலம் தலைக்குள் இருந்து 500 புழுக்கள் அகற்றப்பட்டன.

கடந்த 3 வாரங்களுக்கு முன்பு இவருக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. அதை அவர் கவனிக்காமல் விட்டு விட்டார். அந்த காயத்துக்குள் சீழ் வைத்து புழுக்கள் உருவாகி உள்ளது. அவை தலையில் உள்ள சதைகளை தின்றதால் காயம் பெரிய அளவில் குழியாகி விட்டது என டாக்டர்கள் தெரிவித்தனர்.

பொதுவாக இறந்தவரின் உடலில் தான் புழுக்கள் உருவாகும். ஆனால் உயிருள்ள ஒரு மனிதனின் காயத்தில் புழுக்கள் தோன்றியிருப்பது மிகவும் அரிதானது என்று ஆஸ்பத்திரியின் நரம்பியல் நிபுணர் பாலந்தே கூறினார். இது வேறு விதமான பாதிப்பை ஏற்படுத்தாதது மிகவும் ஆச்சரியமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

போளுவின் தலைக்குள் இருந்த புழுக்களை அகற்றி சிகிச்சை அளித்த அறிக்கையை உலக மருத்துவ குழுவிடம் சமர்பிக்க இந்த ஆஸ்பத்திரியின டாக்டர்கள் குழு முடிவு செய்துள்ளனர்.

இவருக்கு அளித்த சிசிக்சை முறையை வீடியோ மற்றும் புகைப்படங்களாக எடுத்து வைத்துள்ளனர். (ஓ-6)

# ஈழத்தமிழர் படுகொலை குறித்து வெள்ளை அறிக்கை வேண்டும்

## நாடாளுமன்றத்தில் திருமாவளவன் பேச்சு

(டில்லி)



"ஈழத்தமிழர் படுகொலை குறித்து நாடாளுமன்றத்தில் இந்திய அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்." என்று விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத் தலைவர் திரு மாவளவன் எம்.பி பேசினார்.

நாடாளுமன்றத்தில் தனது கன்னிப் பேச்சில் அவர் மேலும் கூறியது, "இந்த நாடாளுமன்றத்தில் குடியரசு தலைவர் உரையில் நாங்கள் எதிர்பார்த்த திட்டங்கள், அறிவிப்புகளின் நிறைய விடுபட்டு விட்டது.

மகளிர் இடஒதுக்கீடு, தனியார் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு போன்ற அறிவிப்புகள் இடம்பெற்றாலும், நாங்கள் எதிர்பார்த்த இலங்கையில் நடைபெற்ற இனப்படு கொலை குறித்து ஏதும் சொல்லாதது வருத்தமளிக்கிறது.

இலங்கைக்கு இந்தியா எந்த வகையில் உதவியது, என்ன உதவிகளை செய்தது, இன்று இலங்கைத் தமிழர்களுக்கு என்ன செய்யப் போகிறது. எந்தவகையில் உதவப் போகிறது.

இனப்படுகொலை தொடர்பாக இந்தியா எடுத்த நடவடிக்கை என்ன என்றும் ஈழத் தமிழர்படுகொலை குறித்தும் நாடாளு மன்றத்தில் இந்திய அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். ஈழத்தமிழர்கள் துன்பத்தில் உச்சத்தில் இருக்கையில் இந்தியா தமிழர்களுக்குஉதவி செய்யவில்லை.

படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்த போது இந்தியா அவர்களுக்கு உதவ முன்வராதது மிகவும் வருந்தத்தக்கது.

இந்திய அரசு தனது இந்த நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்து இந்தியா தனது கண்டனத்தை தெரிவிக்காத நிலை வேதனை அளிக்கிறது என்றார். (ஓ-4)

## இலங்கை இராணுவ தளமாக கச்சதீவு மாறும் அபாயம்

### டி.ராஜா தெரிவிப்பு

இலங்கையின் இராணுவ தளமாக கச்சதீவு மாறும் அபாயம் உள்ளதாக மாநிலங்களவையில் இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் டி.ராஜா கூறியுள்ளார். பாராளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்தில் பங்கேற்று பேசிய அவர் ,

கச்சதீவு ஒப்பந்த விவகாரம் தொடர்பாக மீண்டும் இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணவேண்டும் என்றும் கச்சதீவை இராணுவ தளமாக மாற்ற இலங்கை அரசு முயற்சித்து வருவதாகவும் தெரிவித்தார். (ஓ-4)

## பாகிஸ்தானில் தலிபான்களை ஒழிக்க முடியாது அமெரிக்க இராணுவ அதிகாரி கணிப்பு

(லாகூர்)

அவுஸ்திரேலியாவின் முன்னாள் இராணுவ அதிகாரி டேவிட் கில்குலன் தற்போது அமெரிக்கா இராணுவ ஆலோசகராக இருக்கிறார். போர் விஷயங்களை கணிப்பதில் உலக அளவில் புகழ் பெற்றவர்.

பாகிஸ்தானில் தற்போது நிலவும் நிலைமை குறித்து அவர் கூறியிருப்பதாவது,

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவம் எடுக்கும் நடவடிக்கை சரியான பலனைத் தராது சுவாட் பள்ளத்தாக்கில் இருந்து தலிபான்களை விரட்ட போர் நடக்கிறது. அங்கு 5 ஆயிரம் தலிபான் தீவிரவாதிகள் மட்டுமே உள்ளனர்.

ஆனால் வட மேற்கு பிராந்தியம் முழுவதும் கணக்கிடும் போது இலட்சக் கணக்கான தீவிரவாதிகள் உள்ளனர்.

தலிபான்கள் பஸ்தான் இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்த பகுதியிலும் பஸ்தான் இன பழங்குடியின மக்களே உள்ளனர். அவர்கள் அனைவரும் தலிபான்களை ஆதரிக்கிறார்கள்.

வடமேற்கு பகுதியில் 60 சதவீத பகுதி இடம் தலிபான்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. அவர்கள் மலை பகுதியில் பதுங்கி உள்ளனர். அவர்களை இராணுவ நடவடிக்கை மூலம் வீழ்த்துவது கடினம்.

தலைநகரம் இஸ்லாமாபாத்துக்கு 60 மைல் தூரத்திலேயே தலிபான் தீவிரவாதிகள் இருக்கிறார்கள் இப்போதைய நிலை நீடித்தால் இன்னும் 6 மாதத்தில் பாகிஸ்தான் முற்றிலும் சீர்குலைந்து விடும். தலிபான்கள் நாட்டின் பெரும் பகுதியை கைப்பற்றும் நிலைமையும் உருவாகி உள்ளது என்று அவர் கூறியுள்ளார். (ஓ-4)


## மிதக்கும் காற்றாலைகள் நோர்வே பரீட்சிப்பு

நோர்வே கடலில் மிதக்கும் காற்றலை மின் பிறப்பாக்கிகளை அண்மையில் நிறுவியுள்ளது.

நோர்வேயின் நீண்ட கடற்கரையை அண்டிய பகுதியில் நிறுவப்பட்டுள்ள இக்காற்றாலை மின் பிறப்பாக்கிகள் மூலம் தமது சக்தித் தேவையை பூர்த்தி செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ள நோர்வே அதிகாரிகள் கடற்கரையில் இருந்து பல மைல் தூரத்துக்கு இக் காற்றாலைகளை நிறுவ உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

கடலில் காற்றின் வேகம் அதிகமாக இருப்பதுடன் தொடர்ச்சியாகவும் இருப்பதாக தெரிவித்துள்ள இம் மிதவைக் காற்றாலைத் திட்டத்தின் அதிகாரிகள் இது 2 வருடங்களுக்கு பரீட்சார்த்த முறையில் பேணப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி எதிர் காலத்தில் சக்தி நெருக்கடி என்பனவற்றுடன் ஒன்றிணைத்து இக் கடல் மிதவைக் காற்றாலைகளை தாம் சீமன் நிறுவன உதவியுடன் நிறுவியுள்ளதாகவும் நோர்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-4)



# கம்ரன் அக்மல் துடி துடிப்பு; பாகிஸ்தான் அணி தப்பியது; நெதர்லாந்து சோகத்துடன் வெளியேறியது



கம்ரன் அக்மலின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நெதர்லாந்து அணியை இலகுவாக வீழ்த்தி சுப்பர் -8 சுற்றுக்கு தகுதி பெற்றது.

ஐ.சி.சி. இரண்டாவது இருபது - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று லண்டன் லோட்ஸில் நடைபெற்ற லீக் சுற்றின் 9-வது போட்டியில் பாகிஸ்தான் - நெதர்லாந்து அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

இப்போட்டியில் அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி கம்ரன் அக்மலின் அதிரடியான ஆரம்பத்தின் மூலம் 20 ஓவர்களில் 5விக்கெட்டுக்களையிழந்து 175 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் கம்ரன் அக்மல் 30 பந்துகளில் (3 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் உட்பட) 41 ஓட்டங்களையும் அணித்தலைவர் யூனிஸ்கான் 20 பந்துகளில் (3 சிக்ஸர்கள் உட்பட) 36 ஓட்டங்களையும், மிஸ்பா உல் ஹக் ஆட்டமிழக்காமல் 20 பந்துகளில் ( 3 பவுண்டரிகள் உட்பட) 31 ஓட்டங்களையும் சொகைப் மலிக் 30 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் சீலார் 2விக்கெட்டுக்களையும் நான்ஸ், டோஸ்ஸாற் மற்றும் போர்ரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 176 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 17.3 ஓவர்களில் 93 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் கேர்வேஸி 21 ஓட்டங்களையும் டோஸ்ஸாற் 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகிட் அப்ரிடி 4 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் சயிட் அஜ்மல் 3 விக்கெட்டுக்களையும் முகமொட் ஆமீர், உமல் குல் மற்றும் சொகைப் மலிக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் கம்ரன் அக்மல் விக்கெட் காப்பாளராக 4 ஸ்ரொம் ஆட்டமிழப்புக்களைச் செய்து இருபது -20 கிரிக்கெட்டில் புதிய சாதனை செய்ததுடன் ஆட்டநாயகனாகவும் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி ஓட்ட விகித சராசரியின் மூலம் சுப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெற்றது.

இதன் மூலம் பிரிவு பி யைச் சேர்ந்த இங்கிலாந்து, பாகிஸ்தான் மற்றும் நெதர்லாந்து ஆகிய அணிகள் தலா ஒரு வெற்றியைப் பெற்றது.



எனினும் ஓட்ட விகித சராசரியில் முன்னிலை பெற்ற இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகள் சுப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெற்றன.

# அவசரகாலச் சட்ட வாக்கெடுப்பை புறக்கணித்தார் கிஷோர் எம்.பி.

## அரசுடன் இணைந்து செயற்படத் திட்டம்!

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் மீதான வாக்கெடுப்பு நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றபோது வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது புறக்கணித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம், முகாம்களில் துன்பப்படும் மக்களின் புனர்வாழ்வு போன்றவற்றினை அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு நிறைவேற்றவேண்டிய தேவை இருப்பதன்அடிப்படையில் இம்முடிபினை தான் எடுத்ததாக கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தவை வருமாறு,

இவ்வளவு காலமும் இந்த நாட்டில் ஒரு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இப்பொழுது யுத்தம் முடிபுக்கு வந்திருக்கிறது. அவசரகாலச் சட்டத்தினை நிறுத்துமாறு நாங்கள் கூறியிருக்கிறோம். ஆனால் ஒரு சில காலம் செல்லும் என்று அரசாங்கம் கூறுகிறது. என்றாலும் தற்போது எமது மக்களின் தேவை என்னவெனில் அவர்களை மீள் குடியேற்றம் செய்யவேண்டும்.

3 இலட்சம் மக்கள் முகாம்களில் கஷ்டப்படுகிறார்கள். பல்வேறு பிரச்சினைகள் இருக்கிறது. ஆகையால் இவற்றை நாங்கள் அரசுடன் கதைத்து இந்த மக்களை நாங்கள் பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது. எனக்கு வாக்களித்த மக்களை நான் பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது.

இவ்வளவு காலமும் அரசாங்கம் மக்களைப் பார்ப்பதற்கு எதிர்க் கட்சிகளான எங்களை அனுமதிக்கவில்லை.

ஆகையால் இவற்றைச் செயற்படுத்துவதற்காக நான் இந்த முடிபை எடுத்தேன் என்றார்.

*கேள்வி:* தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான நீங்கள் இவ்வாறு தன்னிச்சையாக முடிபெடுப்பது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இணைந்து எடுக்கும் முடிபுக்கு எதிரானதென்று கருதப்படலாம் அல்லவா?

*பதில்:* இது கட்சிக்கு எதிராகவோ கட்சிக்கு முரண்பாடாகவே நடைபெறவில்லை. எனது விருப்பப்படி நான் இந்த முடிபை எடுத்தேன்.அதற்காக நான் அவசர காலச்சட்டத்தை ஆதரிக்கவில்லை. எதிர்க்கவும்இல்லை.

நான் அதிலே கலந்து கொள்ளாமல் இருந்தேனே தவிர நான் ஆதரித்து வாக்களிக்கவில்லை என்றார்.

*கேள்வி:* தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொள்கைக்கு எதிராக நீங்கள் செயற்படுகிறீர்கள் என்ற விமர்சனம் உங்கள் மீது வைக்கப்படுமல்லவா?

*பதில்:* விமர்சனம் வரலாம் இவ்வளவு காலமும் விமர்சனம் வந்தது வழமை என்னவென்றால் எங்களுடைய தற்போதைய தேவை எமது இடம்பெயர்ந்த மக்களை கவனித்து அவர்களை மீள்குடியேற்ற பல பிரச்சினைகள் இருக்கிறது.

இதனை அரசாங்கத்துடன் கதைத்துத்தான் தீர்க்க முடியும். இப்படியான சூழலில் நாங்கள் பிடிவாதமாக இருந்தால் இந்தப் பிரச்சினைகளை தீர்க்க முடியாது. ஆகையினால்தான் நான் இந்த முடிபை எடுக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டேன்.

*கேள்வி:* அரசாங்கத்தின் பக்கம் நீங்கள் சாய்கிறீர்களா? கட்சி தாவுவதற்கான அறிகுறியாக இது கருதப்படலாம் அல்லவா?

*பதில்:* இல்லை நான் இன்று நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் தொடர்பாக கதைக்கும் போது கூறியிருக்கிறேன்.

இந்த மீள் குடியேற்றம் சம்பந்தமாக் நான் ஜனாதிபதியுடன் சேர்ந்து அதற்கான ஒத்துழைப்பை தருவதாகவும் இந்த மக்களை மீள் குடியேற்றவேண்டும். இந்த மக்களை நாங்கள் பார்க்க வேண்டும். இப்படியாக மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது நாம் பிடிவாதமாக இருப்பதில் பயனில்லை என்ற முடிபுக்கு நான் வந்திருக்கிறேன்.

*கேள்வி:* உங்களுடைய வேண்டுகோள் இலங்கை அரசால் ஏற்கப்படும் பட்சத்தில் பின்னாளில் அவர்கள் கொடுக்கும் அழுத்தங்களுக்கு நீங்கள் உடன்படவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படக் கூடிய வாய்ப்பு ஏற்படும் அல்லவா?

*பதில்:* எனக்கு ஏதும் அழுத்தம் கொடுக்கவேண்டிய தேவை இல்லை. நான் ஒருவருடைய அழுத்தத்துக்கும் கட்டுப்படப் போவதும் இல்லை.

நான் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொண்டிருந்து வாக்களிப்பை தோற்கடித்திருந்தால் நீங்கள் என்னில் பிழை எனக் கூறலாம்.

நான் ஒரு ஆள் வாக்கெடுப்பில் கலந்து கொண்டு இந்த அவசர காலச்சட்டத்தை தோற்கடிக்க முடியாது என்பதால் நான் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்றார்.

(ச-14)

### கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு செல்லும் மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கிழக்குப் பல்கலைக்கழக 51 மாணவர்களுக்கான பிரயாண ஒழுங்கு எதிர்வரும் 13 ஆம் திக்தி சனிக்கிழமை அன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

எனவே மேற்படி தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் நாளை வியாழக்கிழமை 12 மணிக்கு முன்னர் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் தமது பெயர் விபரங்களின் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அரசாங்க அதிபர் மேலும் அறிவித்துள்ளார்.

(ச)

# காயம் குணமடையவில்லை சேவாக் நாடு திரும்புகிறார்


(லண்டன்)

தோள்பட்டை காயம் குணமடையாத காரணத்தால் இந்திய கிரிக்கெட் வீரர் சேவாக் இந்தியா திரும்புகிறார்.

லண்டனில் ஐ.சி.சி. இருபது-20 உலகக் கோப்பைத் தொடர் நடைபெற்று வருகிறது.இந்திய அணியில் சேவாக்கும் இடம் பெற்றிருந்தார்.

ஆனால் அவரது தோள்பட்டை காயம் முழுமையாக குணமடையாததால் அவர் நாடு திரும்புகிறார். தோள்பட்டையில் அறுவைச் சிகிச்சைசெய்யவேண்டிருப்பதால் விரைவில் அவர் தென்னாபிரிக்கா செல்ல உள்ளார்.

சேவாக்கிற்குப் பதிலாக தமிழக



வீரர் தினேஷ் கார்த்திக் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இதற்காக அவர் இங்கிலாந்து புறப்பட்டுச்செல்லவுள்ளார்.

# உலகக் கிண்ண கால்பந்தாட்டம்; புதிய அரங்கு திறந்து வைப்பு

(போர்ட் எலிஸபெத்)

உலகக் கிண்ண கால்பந்து தொடருக்காக அமைக்கப்பட்ட புதிய கால்பந்து மைதானம் தென்னாபிரிக்



காவில் திறந்து வைக்கப்பட்டது.

உலகக் கிண்ண கால்பந்து தொடர் 2010 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளது. இதற்காக 5 புதிய கால்பந்து அரங்குகள் பயன்படுத்தப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் அமைக்கப்பட்ட புதிய கால்பந்து அரங்கு போர்ட் எலிஸபெத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. "நெல்ஸன் மண்டேலா பே" என பெயரிடப்பட்டுள்ள இந்த அரங்கு 48 ஆயிரம் ஆசனங்களை கொண்டுள்ளது.

இங்கு 2010 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின் காலிறுதி மற்றும் மூன்று, நான்காம் அணிகளைத் தேர்வு செய்யும் போட்டிகள் உட்பட 8 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

எனினும் இங்கு முதல் விளையாட்டாக பிரித்தானிய-அயர்லாந்து லயன்ஸ் அணிகள் மோதும் ரக்பி போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாநகர சபை, யாழ்ப்பாணம்



## பயங்கரவாதத்துடன் தொடர்புடையோரை அழிக்க அவசரகாலச்சட்டம் தேவை

### பிரதமர் வலியுறுத்தல்

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சகல சக்திகளையும் அழிப்பதற்கு அவசரகால சட்டம் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட வேண்டியுள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பல தசாப்த காலமாக பயங்கரவாதத்தினால் துன்பப்பட்டு வந்த மக்கள் பயங்கர வாதம் ஒழிக்கப்பட்டதால் வீதிகளில் குழுமி ஆரவாரம் செய்தனர். அவர்கள் தற்போது முழு மையான சுதந்திர மனநிலையுடன் காணப்படுகின்றனர் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

அவசர கால சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிரதமர் இதனைக் கூறினார்.

நாட்டை துரித கதியில் அபிவிருத்தி செய்ய அரசாங்கம் ஆரம்பித்துள்ள அனைத்து வேலைத் திட்டங்களுக்கும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தற்போது நிலவும் அமைதியான சூழ்நிலையைப் பாது காக்க அரசாங்கத்தால் மாத்திரம் முடியாது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல உறுப்பினர்களும் இந்த பொறுப்பினை ஏற்க வேண்டும் என வலியுறுத்தினார். (ச-5)

# ஈழத் தமிழர்களின் துயர் துடைப்பை விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டம்

## தமிழ் நாட்டு எம்.பிக்கள் வலியுறுத்தல்

(புதுடில்லி)

போரில் பாதிக்கப்பட்ட மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்களின் துயரை துடைக்கவும் மறுவாழ்வு வழங்கவும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிப்பதற்காக விரைவில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

உறுப்பினர்களின் கருத்தை வரவேற்பதாகவும் இது குறித்து பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேசி முடிவு அறிவிக்கப்படும் என்றும் இந்திய மத்திய அமைச்சர் பிருத்திவிராஜ் சவான் கூறியுள்ளார்.

நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாளான நேற்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இலங்கை இனப் பிரச்சினை குறித்து பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் வெங்கையா நாயுடு சிக்கல் எழுப்பினார்.

இலங்கையில் நடைபெற்ற போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலைமை தொடர்பாக அங்கிருந்து வரும் செய்திகள் மிகவும் கொடுமையாக உள்ளன. இலங்கையில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை படையினர் கொன்று குவித்திருக்கின்றனர்.

போரில் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களுக்கு உலக சமுதாயம் ஒன்றுமே செய்யவில்லை. ஈழத் தமிழரின் நிலை குறித்தும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது குறித்தும் விவாதிக்க அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தை பிரதமர் மன்மோகன்சிங் கூட்ட வேண்டும் என்றும் வெங்கையா நாயுடு வலியுறுத்தியுள்ளார்.

இதற்கு தமிழ் நாட்டைச் சேர்ந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் கருத்தைக் கேட்ட பிரதமர் அலுவலகத்துறை அமைச்சரும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சருமான பிருத்திராஜ் சவுகான் இலங்கை பிரச்சினை மிகவும் உணர்ச்சிகரமான சிக்கலாகும்.

இந்த பிரச்சினை பற்றி அனைத்து கட்சி கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்ற உறுப்பினர்களின் கருத்து பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தெரிவிக்கப்படும். அதன் பின்னர் இது தொடர்பாக முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ச-5)

## தமிழ் மக்க...

களுக்குத் தேவைப்படும் உதவிகளை அரசு செய்து வருகிறது. தமிழர்களை அவர்களது சொந்தப் பகுதிகளில் மீண்டும் குடியமர்த்துவது தொடர்பாக அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

இந்த ஆண்டு முடிபிற்குள் அதாவது இன்னும் ஆறு மாதங்களில் 80 சதவீத மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படுவர்.

வன்னிப் பகுதியில் விடுதலைப் புலிகளால் ஏராளமான கண்ணிவெடிகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. மீண்டும் அப்பகுதியில் மக்கள் வசிக்க வசதியாக கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு முன்னதாக அங்குள்ள கண்ணிவெடிகள் முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (ச-5)

## மட்டக்களப்பு மாநகர முதல்...

விருப்பத்தின் பேரிலேயே இந்த முடிபை தாம் எடுத்ததாகவும் யாருடைய அழுத்தமும் இம் முடிபுக்கு காரணமல்ல என் றும் செய்தியாளர்களிடம் தெரிவித்த சிவகீதா பிரபாகரன், ஜனாதிபதியைச் சந்தித்து அடுத்த சில தினங்களில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணையவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த மட்டக்களப்பு மாநகர முதல்வர், நேற்று தலைவர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்ற கட்சியின் மத்தியக் குழு கூட்டத்தின் போதே தனது தீர்மானத்தை அறிவித்ததாக கட்சியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் கைலேஸ்வரராஜா தெரிவிக்கையில்;

இன்று எமது கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடை பெற்றது இதில் எமது மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவகீதா பிரபாகரனும் கலந்து கொண்டார்.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ரி.எம்.வி.பி.கட்சியிலிருந்து தான் விலகிக் கொள்வதாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைவதாகவும் தெரிவித்தார்.

அதற்கமைய எமது கட்சித்தலைமை இலங்கையில், தனிநபர் சுதந்திரம், தனிநபர் ஜனநாயகம் என்பன இருக்கிறது.

அதனடிப்படையில் தான் விரும்பும் கட்சியில் தான் நினைக்கும் கொள்கையை ஏற்றுக் கொள்வதற்கான ஜனநாயக சுதந்திரம் இருப்பதனால் எமது கட்சித்தலைமை அவருடைய கொள்கையை ஏற்றுக்கொண்டு அவர் இன்றில் இருந்து (நேற்று) சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைவதான வேண்டுகோளை ஏற்று அதற்கு அனுமதி அளித்தது.

அவரும் எமது கட்சியிலிருந்து உத்தியோக பூர்வமாக விலகிக் கொண்டார் என்று அவர் தெரிவித்தார். (ச-5,14)

## மேர்வின் சில்வா பதவி...

செய்வது என்ற தனது முடிபை ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளபோதும், இதுவரை எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லையென அமைச்சர் கூறினார்.

தனது கடமையை நாட்டுக்குச் செய்வதற்கு இதுவொரு சிறந்தவழி எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான மோதல்களில் முக்கிய பங்காற்றியிருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுக் கொள்வாரா என்பது தொடர்பில் இதுவரை எந்தவிதமான தகவல்களும் வெளியாகவில்லை.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் மற்றுமொரு சகோதரருமான பசில் ராஜபக்ஷவும் தேசியப் பட்டியல் மூலம் நாடாளு மன்றத்துக்குச் சென்றிருந்ததுடன், அரசியல் ரீதியான விடயங்களை அவர் கையாண்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அவசரகாலச்...

அமர்வில் கலந்து கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிராக வாக்களித்ததுடன் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் வாக்களிப்பின் போது சபையில் இருக்கவில்லை. (ச-5,14)

## வவு.நலன்புரி...

அகதி மக்களுடன் கலந்துரையாடியுள்ளார். அவருடன் மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் சென்றிருந்தார்.

இதேவேளை இன்று புதன்கிழமை யசூசி அகாசி; ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம உள்ளிட்ட அரசாங்க உயர்மட்ட பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். யசூசி அகாசி இலங்கைக்கு மேற்கொள்ளும் 18ஆவது பயணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தற்காலிக இணைப்பிலுள்ள...

பின்னர் வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உட்பட அரசகட்டுப்பாடற்ற பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றிய வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு அவர்களது சொந்த மாவட்டங்களிலேயே தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டது.

தற்போது மோதல்கள் காரணமாக வன்னிப் பாடசாலை மாணவர்கள் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம், வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இம் மாணவர்களுக்காக நலன்புரி முகாம்களில் தற்காலிக பாடசாலைகள் நிறுவப்பட்டு கல்விநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்நிலையிலேயே வன்னிப் பாடசாலைகளில் நியமனம் பெற்ற ஆசிரியர்கள் மூன்றாம் தவணை முதல் அவர்களின் சொந்தப் பாடசாலைகளிற்கு இணைக்கப்படுவர் என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-5)

## வவு.இராணுவத் தலைமையக...

கிருந்த ஆயுதக்கிடங்கில் தீ ஏற்பட்டது. இதனால் அங்கிருந்த ஷெல்கள் வெடித்தன.

அதன் பின்னர் தீ அணைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. இது விபத்தா என்பது தற்போது உறுதியாகக் கூற முடியாது. இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இச்சம்பவம் காரணமாக உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்பட வில்லை.

அங்கிருந்து குண்டுகள் எதுவும் பொது மக்கள் பகுதியில் விழுந்து வெடிக்கவும் இல்லை. அங்கு தாக்குதல் இடம் பெற்றிருக்க வாய்ப்பு எழவில்லை. இதை என்னால் உறுதியாகக் கூற முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-5)


YOGI'S

(Academy of Beauty Culture, Hair Dressing & Home Science)



CAKE AND SUGAR CRAFT EXHIBITION 2009

யாழ் பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் ஆதரவில்
எமது அக்கடமி மாணவிகள் வழங்கும்
கேக் மாச்சீனி மலர் அலங்காரக் கண்காட்சி
12-06-2009 முதல் ஆரம்பம்
இக்கண்காட்சியை
யாழ்ப்பாண அரசாங்க அதிபர் க.கணேஷ்
அவர்கள் ஆரம்பித்து வைப்பார்.

இடம் : 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
நேரம் : 12-06-2009 10 AM முதல் 7PM வரை
13-ம் திகதி முதல் 15-ம் திகதி வரை 9AM முதல் 7PM வரை

Phone : 222 2796
060 221 0077

நிர்வாக இயக்குநர்

(C-2547)


## தமிழீழ விடுதலைப்...

"தமிழர்களின் பிரச்சினை விடுதலைப் புலிகளை விடப் பெரியது. தமிழர்கள் ஏனைய சமூகங்களைப் போன்று சமத்துவமாக, இறைமையுடன், தன்மானத்துடன் வாழ்வதற்கான தேவைகளை இலங்கை துணிவுடன் நிறைவேற்றும் என நான் நம்புகிறேன்" என மன்மோகன் சிங் நேற்று செவ்வாய்க்கிழமை லோக்சபாவில் கூறினார்.

குடியரசுத் தலைவர் லோக்சபாவில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து நடத்தப்பட்ட விவாதத்தின்போது லோக்சபா உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இந்தியப் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை மக்களுடன் எமக்கு பல நூற்றாண்டுகால உறவு இருக்கிறது. அங்கிருக்கின்ற தமிழ் மக்களின் நலன் குறித்து எமக்கு ஆழமான மற்றும் பிணைப்புடனான ஆர்வம் இருக்கின்றன. தமிழர் பிரச்சினை என்பது விடுதலைப் புலிகளை விட ஆழமானதாகும்.

இலங்கை மக்கள் சம உரிமை பெற்ற குடிகளாக கௌரவத்துடன் வாழ்வதற்கான அவர்களுடைய அபிலாசைகளைத் தீர்த்து வைக்க புதிய சிந்தனைகளையும் துணிச்சலையும் இலங்கை அரசு காண்பிக்கும் என்று நான் மிகவும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறேன்.

இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களின் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளிலும் நாங்கள் செயற்றிறன் மிக்க பங்கை ஆற்றியிருக்கிறோம். இந்தத் தேவைகளிற்காக நாங்கள் ஏற்கனவே 500 கோடிரூபாவினை ஒதுக்கியிருக்கிறோம்.

அந்த மக்கள் தமது சொந்த இடங்களிற்குச் சென்று வாழ்வதற்கான நடவடிக்கைகளில் நாங்கள் மேலும் உதவிகளைச் செய்ய விரும்புகின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் விரைவில் இயல்பு நிலை திரும்பவும், அகதிகள் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் தங்களது இல்லம் திரும்பவும், வேறு ஏதேனும் உதவிகள் தேவைப்பட்டாலும் அதை இந்திய அரசு வழங்கும் என்று மன்மோகன் சிங் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் இடையேயான உறவில் புதிய தொடக்கம் ஏற்பட்டிருக்கிறது என்றும் பாகிஸ்தானுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளவே இந்தியா விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக அளவில் பொருளாதார பின்னடைவு காணப்படும் போதிலும் இந்தியாவால் 8 முதல் 9 வீத பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்றும் அதற்கு அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் மன்மோகன் சிங் வலியுறுத்தினார். (ச-5,14)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.